رسالة في الدماء الطبيعية للنساء - تاميلي

# பெண்கள் சுத்தம் தொடர்பான ஒரு கையேடு

பேரறிஞர் அஷ்ஷைக்
முஹம்மத் பின் ஸாலிஹ்
அல்உஸைமீன் (ரஹ்)

islamhouse.com

# رسالةٌ في الدماء الطبيعية للنساء - تاميلي

# பெண்கள் சுத்தம் தொடர்பான ஒரு கையேடு

ஆக்கம் :
**பேரறிஞர் அஷ்ஷைக்**
**முஹம்மத் பின் ஸாலிஹ் அல்உஸைமீன் (ரஹ்)**

அல்லாஹ் அவருடையவும், அவருடைய பெற்றோர், அனைத்து முஸ்லிம்களுடையவும் பாவங்களை மன்னிப்பானாக!

**islamhouse.com**

شركاء التنفيذ:

دار الإسلام جمعية الربوة رواد الترجمة المحتوى الإسلامي

يتاح طباعة هذا الإصدار ونشره بأي وسيلة مع الالتزام بالإشارة إلى المصدر وعدم التغيير في النص.

Telephone: +966114454900

ceo@rabwah.sa

P.O.BOX: 29465

RIYADH: 11557

www.islamhouse.com

# உள்ளடக்கம்


1. முன்னுரை 05

2. முதலாம் பகுதி: மாதவிடாய் என்பதன் கருத்தும் அதன் நுட்பமும் 09

3. இரண்டாம் பகுதி: மாதவிடாய்க் காலமும் தவணையும் 11

4. மூன்றாம் பகுதி: மாதவிடாய் மாற்றங்கள்/ வித்தியாசங்கள் 26

5. நான்காம் பகுதி: மாதவிடாய் தொடர்பான சட்டங்கள் 34

6. ஐந்தாம் பகுதி: (இஸ்திஹாழா) தொடர் உதிரப் போக்கும் அது தொடர்பான சட்டங்களும் 59

7. ஆறாவது பகுதி: நிபாஸும் (பேறுகால உதிரப்போக்கும்) அதன் சட்டங்களும் 72

8. ஏழாவது பகுதி: மாதவிடாய் வராது தடுக்கின்ற அல்லது அதனை வரவழைக்கத்தக்க, அல்லது கருவுறாது தடுக்கக்கூடிய அல்லது கருக்கலைப்பை ஏற்படுத்தக்கூடியவற்றை பயண்படுத்தல் 81

## *அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் (ஆரம்பிக்கிறேன்)*

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே, அவனைப் போற்றி, அவனிடமே உதவியும் தேடுகிறோம், அவனிடமே பாவ மன்னிப்புக்கோரி மீளுகிறோம், எமது உள்ளங்களின் தீங்கு களிருந்தும், செயல்களின் தீங்குகளிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்பை தேடுகிறோம். யாருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுகிறானோ அவரை வழிகெடுப்போன் யாருமில்லை. யாரை அல்லாஹ் வழிதவறச் செய்து விட்டானோ அவருக்கு நேர்வழி காட்டுவோன் யாரும் இல்லை. மேலும் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு எந்த இணையாளனும் இல்லை என்றும் சான்று பகர்கின்றேன்.

மேலும், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனது அடியாரும் தூதருமாவார் என்றும் சான்று பகர் கின்றேன். மேலும் இறைத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் மேலான குடும்பத்தவர்கள். கண்ணியம் நிறைந்த தோழர்கள் மறுமை வரையில் அவர்களை உரிய முறையில் பின்பற்றி வாழ் வோர் மீதும் அல்லாஹ் ஸலாத்தையும் ஸலாமையும் பொழி வானாக.

பெண்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு குறிப் பிட்ட நாட்கள் வெளிவரும் மாதவிடாய், இஸ்திஹாழாஹ் (தொடர் உதிரப் போக்கு) நிஃபாஸ் (பிரசவத்தின் பின்

வெளிவரும் இரத்தம்) என மூன்று விதமான உதிரப் போக்குகள் இருக்கின்றன. முக்கிய விடயங்களில் ஒன்றான இவை குறித்து தெளிவைப் பெற்றுக்கொள்வதுடன் இதன் சட்டதிட்டங்களை அறிந்துகொள்வதும், இவை குறித்த அறிஞர்களின் கூற்றுக்களில் சரியானவற்றை பிழையான வற்றிலிருந்து வேறுபடுத்திக் கொள்வதும் மிக அத்தியா வசிய ஒன்றாக இருக்கிறது. அறிஞர்களின் கூற்றுகளை முன்னுரிமைப்படுத்துவதும் முன்னுரிமைப்படுத்தாது ஏற்றுக் கொள்ளாதிருப்பதும் அல்குர்ஆனினதும், அஸ்ஸுன்னாஹ் வினதும் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டே அமைய வேண்டும். இதற்கு பின்வரும் காரணங்களை குறிப்பிட முடியும்.

**ஒன்று :** அடியார்கள் வணக்கமாகக் கொள்ளும் அல்லாஹ் வின் கட்டளைகள் மற்றும் சட்டதிட்டங்கள் அனைத்தும் அவ்விரண்டு அடிப்படை மூலாதாரங்களின் மீதே கட்டி யெழுப்பப்பட்டுள்ளன.

**இரண்டாவது :** குர்ஆன் சுன்னாவை சார்ந்திருப்பதில் ஒரு வகையான அமைதியும், பூரிப்பும், ஆறுதலும், மன நிம்மதி யும், நிறைவும் ஏற்படுவதனை உணர முடியும்.

**மூன்றாவது :** அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாஹ் தவிர்ந்தவை அடிப்படை ஆதாரங்களாக அமையாது அவை துணை சான்றாதாரமாக மாத்திரமே அமையும்.

ஏனெனில் அல்குர்ஆன் அஸ்ஸுன்னா தவிர்ந்த எதிலும் ஆதாரம் இல்லை. அதே போன்று, சரியான கூற்றின் படி

குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் முரண்படாத வகையிலும் மற்றொரு ஸஹாபியின் கூற்றுக்கு முரணாகாத முறை யிலும் கூறப்பட்ட ஸஹாபாக்களிலுள்ள அறிஞர்களின் கூற்றுக்களும் துணை ஆதாரமாக அமையும். அக்கூற்று குர்ஆன் ஸுன்னாவுக்கு மாற்றமாக அமைந்தால் குர்ஆன் ஸுன்னாவை எடுத்து நடப்பது கடமையாகும். அதே வேளை, மற்றொரு ஸஹாபியால் முரண்பட்ட கூற்றொன்று கூறப்பட்டு இருக்குமாயின், (அப்பொழுது அல் குர்ஆனுக் கும் அஸ்ஸுன்னாஹ்வுக்கும் மிக நெருங்கிய ஆதாரங்க ளைக் கொண்டு) உறுதிப்படுத்தப்பட்ட கூற்றை ஆராய்ந்து முன்னுரிமைப்படுத்த வேண்டும். இவ்வாறு கருத்து முரண் படும் போது நடந்து கொள்ள வேண்டிய முறையை அல்லாஹுதஆலா பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

*'நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டோராக இருந்து, ஏதேனும் ஒரு விடயத்தில் கருத்து வேறுபாடு கொண்டால்; அதனை அல்லாஹ்விடமும் இறை தூதரிடமும் (தீர்வை வேண்டி) திருப்பிவிடுங்கள். இதுவே மிகச் சிறந்ததும் அழகானதுமான முடிவாகும்.'*

இது பெண்கள் சுத்தம் தொடர்பான ஷரீஆ சட்டங்கள் அடங்கிய ஒரு சிறு கையேடாகும். இது பின்வரும் தலைப்பு களை உள்ளடக்கியுள்ளது.

தலைப்பு 1. மாதவிடாய் என்பதன் கருத்தும் அதன் நுட்பமும்.

தலைப்பு 2. மாதவிடாய்க் காலமும் தவணையும்

தலைப்பு 3. மாதவிடாய் தொடர்பான வித்தியாசங்கள்

தலைப்பு 4. மாதவிடாய் தொடர்பான சட்டங்கள்

தலைப்பு 5. தொடர் உதிரப்போக்கு (இஸ்திஹாழா) தொடர்பான சட்டங்களும்

தலைப்பு 6. நிபாஸும் (பேறுகால உதிரப்போக்கும்) அதன் சட்டங்களும்

தலைப்பு 7. மாதவிடாய் வராது தடுக்கின்ற அல்லது அதனை வரவழைக்கத்தக்க, அல்லது கருவுறாது தடுக்கக் கூடிய அல்லது கருக்கலைப்பை ஏற்படுத்தக்கூடியவற்றை பயண்படுத்தல்

*

## முதலாம் பகுதி :

# மாதவிடாய் என்பதன் கருத்தும் அதன் நுட்பமும்.

அறபு மொழியில் மாதவிடாயை ஹைழ் என்றழைப்பர். அதன் மொழிக் கருத்து வடிந்தோடுதல், கொட்டுதல் என்பதாகும்.

இஸ்லாமிய ஷரீஆ பரிபாஷையில் 'ஹைழ்' என்பது ஒரு பூப்படைந்த பெண்களிடமிருந்து மாதந்தோரும் சுழற்சி முறையில் இயற்கையாக வெளிப்படும் இரத்தத்தை குறிக்கின்றது. எனவே. இயற்கையாக வெளிப்படும் இந்த இரத்தப் போக்கானது ஏதாவதொரு நோய் அல்லது காயம், கருச்சிதைவு, பிரசவம், போன்ற இரத்தப் போக்குடன் இணைத்து நோக்குதல் கூடாது. பெண்களுக்கு ஏற்படும் இந்த மாதவிடாய் அவர்களுடைய உடல் நிலை, வாழும் சூழல், தட்ப வெப்பநிலை ஆகியவற்றைப் பொறுத்து வேறுபடும். ஆகவே பெண்கள் இந்த விடயத்தில் தங்களுக்கிடையில் தெளிவாக வேறுபட்டு நிற்கின்றனர்.

இந்த இயற்கை செயன்முறையானது அல்லாஹ்வின் ஆழமான ஞானத்தின் வெளிப்பாடாகும். இதில் மிகப்பெரும் மர்மம் உள்ளடங்கியுள்ளது அதாவது ஒரு தாய் கர்ப்பமடைந்ததும் அவளின் கருப்பையில் உள்ள கருக்கட்டிய சினைமுட்டைக்கு (சின்னஞ்சிறு உயிருக்கு) தாயின்

வயிற்றுக்கு வெளியில் உள்ளவரைப் போன்று ஊட்டச் சத்துள்ள உணவைப் பெற்றுக்கொள்ள முடியாது. அது மாத்திரமின்றி அந்த உயிருடன் மிகக் கருணை கொண் டோருக்குக் கூட ஒருவேளை சத்துள்ள உணவை ஊட்டிட முடியாது. இந்த நிலையில், வல்லவனான அல்லாஹ் மிகவும் சிறப்பான இரத்த ஓட்ட முறையொன்றை (பெண் ணுள்) அமைத்துள்ளான். அந்த முறைக்கமைய உருவாகும் சத்துள்ள உணவை தொப்புல் கொடி மூலம் கருவறையி லுள்ள உயிருக்குக் கிடைக்கச் செய்கின்றான். படைப்பாளர் களில் சிறந்தோனான அல்லாஹ் மிகவும் உயர்ந்தவனா வான்.

இதுவே ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்படுவதன் இரகசியமாகும். ஒரு பெண் கருத்தரித்துவிடும் போது அவளுக்கு மாதவிடாய் நின்று விடுகிறது. இதன் போது அவள் மிக அரிதாகவே இரத்தப் போக்குக்கு ஆளாகிறாள். இவ்வாறுதான் பாலூட்டும் தாய்க்கும் பாலூட்டும் ஆரம்பக் கட்டத்தில் குறைவாகவே மாதவிடாய் ஏற்படுகிறது.

*

# இரண்டாம் பகுதி :

# மாதவிடாய்க் காலமும் தவணையும்

இத்தலைப்பானது இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

முதலாவது பகுதி : பூப்பெய்தல் வயது தொடர்பானது.

இரண்டாம் பகுதி : மாதவிடாய் காலம் தொடர்பானது.

**முதலாம் பகுதி:** ஒரு பெண்ணுக்கு பன்னிரண்டு வயதிற்கும் ஐம்பது வயதிற்கும் இடைப்பட்ட காலத்தில் மாதவிடாய் உண்டாகும். ஆயினும், அவளது உடல் நிலை, வாழும் சூழலுக்கேற்ப வெப்பநிலையை பொறுத்து குறிப்பிடப்பட்ட வயதான பன்னிரண்டுக்கு முன் அல்லது பின் மாதவிடாய் ஏற்படலாம்.

மாதவிடாய் ஏற்படுவதற்கு வயதெல்லை உண்டா என்பதி லும், குறித்த மாதவிடாய் கால எல்லைக்கு முன்னோ பின்னோ வெளியாகும் இரத்தம் தொடர்பாகவும், அது அவளது மாதவிடாய் இரத்தமா அல்லது வேறேதும் இரத்தமா? என்பதிலும் மார்க்க அறிஞர்கள்; கருத்து முரண்பாடு கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக முரண்பட்ட கருத்துக்களை அறிஞர்கள் கொண்டுள்ளனர். இச்சட்டப்பிரச்சினை தொடர்பான

கருத்துமுரண்பாடுகளை குறிப்பிட்டதன் பின் இமாம் தாரிமி அவர்கள் : 'என்னைப் பொறுத்த வரையில் இவை அனைத் தும் பிழையானவை!' ஆகவே இந்த விவகாரத்திற்கு அடிப் படை ஒன்று உண்டு. ஒருவரின் வயதை கருத்தில் கொள் ளாது அவருக்கு இரத்தம் வெளியாகியுள்ளதா? இல்லையா? என்பதைத்தான் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இவ்வாறு வெளியான இரத்தத்தை மாதவிடாய் இரத்த மாகக் கருதுவது அவசியமானதாகும் என கூறுகிறார்கள். அல்லாஹ்வே அனைத்தையும் அறிந்தவனாவான்!'

இமாம் அத் தாரிமீ அவர்கள் கூறியதே மிகவும் சரியானது. இதுவே செய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா அவர்களின் கருத்துமாகும். எனவே, ஒரு பெண் தன்னிடம் இரத்தம் வெளிவரக் கண்டால் அதை மாதவிடாய் என்றே கருத வேண்டும். அப்பொழுது அவள் ஒன்பது வயதை விடக் குறைவானவளாகவோ அல்லது ஐம்பது வயதை விடக் கூடுதலானவளாகவோ இருக்கின்றாள் என்பதை கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில், ஒரு பெண்; தனது மாதவிலக்கை காண்பதைப் பொருத்தே அல்லாஹ்வும் அவனின் தூதரும் அதற்கான சட்டதிட்டங்களை தொடர் படுத்தியுள்ளார்கள். அன்றி, மாதவிலக்கு ஆரம்பமாவதற் கும் முடிவதற்கும் அல்குர்ஆனிலும் நபியவர்களின் வழி காட்டலிலும் குறித்த வயதெல்லை குறிப்பிடப்படவில்லை. உண்மையில் இது தொடர்பான வயதெல்லையை வகுக்க அல்குர்ஆனினதும் அஸ்ஸுன்னாவினதும் ஆதாரம் அவசி

யமாகின்றது. ஆனால், அத்தகைய ஆதாரங்கள் எதுவுமே அதில் காண முடியவில்லை.

**இரண்டாம் பகுதி :** மாதவிடாய்க்கான கால எல்லை (மாத விடாய்க்கான நாட்களை கணக்கிடுதல்)

ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் உண்டாகிவிட்டால் அது எவ்வளவு நாட்கள் நீடிக்கும் என்பதில் மார்க்க அறிஞர் களுக்கு மத்தியில் ஆறு அல்லது ஏழுக்கும் மேற்பட்ட கருத்து நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. சில அறிஞர்கள்; 'மாதவிடாய் நீடிக்கும் குறைந்த பட்ச நாட்கள் அதி கூடிய நாட்கள் என்ற வரையறை எதுவும் கிடையாது!' என்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளனர் என இமாம் இப்னுல் முன்ஸிர் ரஹிமஹுல்லாஹ் குறிப்பிடுகிறார்கள்.

நூலாசிரியர் அவர்கள் குறிப்பிடுகையில், 'இது ஏற்கனவே குறிப்பிட்ட அத்தாரிமி அவர்களின் கூற்றை ஒத்ததாகும், இதுவே ஷைகுல் இஸ்லாம்; இப்னு தைமிய்யா அவர்களின் தெரிவு என்பதுடன், இதுவே சரியான கருத்துமாகும். ஏனெனில், இது அல்குர்ஆனினதும் அஸ்ஸுன்னாவினதும், ஒப்பீட்டு ரீதியான ஆதாரங்களைக் கொண்டும் உறுதி படுத்தப்பட்டுள்ளது. இதற்கான ஆதாரங்கள் பின்வருமாறு :

**ஆதாரம் - 1** அல்லாஹு தஆலா கூறுகின்றான்: *'இன்னும் மாதவிடாய் பற்றியும் உம்மிடம் கேட்கின்றனர்;. நீர் கூறும்: 'அது ஒரு தூய்மையற்ற (அசௌகரியமான) நிலையாகும். ஆகவே மாதவிடாய்க் காலத்தில் பெண்களுடன் உடலுறவு கொள்வதை விட்டும் விலகி இருங்கள்; மேலும், அவர்கள்*

*தூய்மையடையும் வரை (உடலுறவுக்காக) அவர்களை நெருங்காதீர்கள்.'* (அல்பகரா :222)

இங்கு அல்லாஹ், ஒரு பெண் மாதவிடாய் இருக்கும் நிலையில் உடலுறவு கொள்ள முடியாது என்ற தடைக்கான கால நிர்ணயத்தை அவளது சுத்தத்தை வைத்தே தீர்மானித் துள்ளான். அவ்வாறின்றி, ஒரு நாள், மூன்று நாட்கள், பதினைந்து நாட்கள் என கால எல்லையொன்றை குறிப்பிட வில்லையென்பதை இங்கு அறிய முடிகிறது. எனவே மாத விடாய் (சுத்தமற்ற நிலை) எப்போது ஏற்படுகிறதோ அப்போது அதற்குரிய சட்டங்கள் அவளின் மீது விதியா கிறது. எப்போது அவள் மாதவிடாயிலிருந்து சுத்தமான நிலையை அடைகிறாளோ அப்போது மாதவிடாய்க்குரிய சட்டங்கள் நீங்கி விடுகிறது. இதன் பிரகாரம் மாதவிடாய் நாட்கள் எத்தனை என வரையறுத்து குறிப்பிட முடியாது என்பதே இதன் சாராம்சமாகும்.

**ஆதாரம் - 2** ஸஹீஹ் முஸ்லிமில் பதிவான பின்வரும் ஹதீஸும் இதற்கு ஆதாரமாக உள்ளது. உம்ராவுக்கு நிய்யத் வைத்த நிலையில் ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர் களுக்கு மாதவிடாய் ஏற்பட்டது. அப்போது நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறி னார்கள் 'ஆஇஷாவே! ஒரு ஹாஜி செய்ய வேண்டிய எல்லாவற்றையும் செய்யுங்கள். ஆனால், மாதவிடாயி லிருந்து சுத்தமாகும் வரை கஃபாவை தவாஃப் செய்ய வேண்டாம்' என்றார்கள். அதற்குப்பிறகு துல் ஹிஜ்ஜா

மாதம் 10 ஆம் நாள் தான் சுத்தமானதாக குறிப்பிடுகி றார்கள்.

மேலும் இதற்கு ஆதாரமாக ஸஹீஹுல் புஹாரி மற்றும் ஸஹீஹ் முஸ்லிமில் பதிவான மற்றோர் ஆதாரபூர்வமான ஹதீஸும் காணப்படுகிறது. 'நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆஇஷா (ரழி) அவர்களுக்கு கூறினார் கள் 'நீங்கள் மாதவிடாயிலிருந்து சுத்தமடையும் வரை காத்தி ருந்து, அதன்பின் 'அத்தன்ஈம்' என்ற இடத்திற்குச் சென்று, அங்கு இஹ்ராம் நிய்யத் வைத்து (உம்ரா செய்து) கொள் ளுங்கள் என்றார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை ஹஜ் கிரியைகளை செய்வதிலிருந்து தடுத்து நிறுத்தக் காரணமாக இருந்தது அப்போதைய அவர்களது சுத்தம் தொடர்பான விடயங்களே என்பது தெளிவாகின்றது. அத்துடன் இந்த ஹதீஸிலும் மாதவிடாயின் போது வெளிவரும் இரத்தம் தொடர்பான கால எல்லையொன்றை அதாவது குறிப்பிட்ட நாட்களுக்குள் தூய்மையடைந்து கடமைகளை நிறை வேற்றுமாறு அவர்கள் வரையறுத்துக் குறிப்பிடவில்லை.

எனவே, இது தொடர்பான இஸ்லாமிய சட்டம் மாதவிடாய் இரத்தம் வெளிப்படுதல் மற்றும் வெளிப்படாது இருத்தல் என்ற நிலைகளைப் பொறுத்து அமைவதைக் காணலாம். எனவே, இதன் மூலமும் மாதவிடாய் இருப்பது, இல்லாமல் போவதை வைத்தே மார்க்க சட்டங்கள் அமையப்

பெற்றிருக்கிறதே அன்றி நாட்களின் என்னிக்கையைப் பொருத்தல்ல என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**ஆதாரம் - 3** :பெண்களின் மாதவிடாய் ஆரம்பமாகும் வயது, முடியும் வயது பற்றி சில சட்ட அறிஞர்களால் குறிப்பிடப் பட்ட அளவுகோள்களும் விளக்கங்களும் அல்லாஹ்வின் அருள்மறை அல்குர்ஆனிலோ, நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வழிமுறை அஸ்ஸுன்னா விலோ காணப்படவில்லை. இது குறித்த தெளிவு அத்தியா வசியத் தேவை என்றிருந்தும் கூட அது குறித்து அல்குர்ஆனோ அஸ்ஸுன்னாவோ எதனையும் குறிப்பிட வில்லை. இந்த அளவுகோள்களை நன்கு விளங்குவதும். அல்லாஹ்வுக்கான வணக்க வழிபாடுகளில் அத்தியாவசிய மாகவும் இருப்பின், அல்லாஹ்வும் அவன் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களும் இது பற்றி ஒவ்வொருவரும் மிகவும் தெளிவான முறையில் அறிந்து கொள்ளும் விதமாக தெளிவுபடுத்தியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

அது மாத்திரமின்றி மாதவிடாயின் விளைவாக ஏற்படுகின்ற சட்டங்கள் தொழுகை, நோன்பு, விவாகம், விவாகரத்து, வாரிசுச் சொத்து போன்றவைகளில் ஆதிக்கம் செலுத்துவது அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. அவ்வாறிருந்தும் அதற்கான கால வரையறைகளை அல் குர்ஆனோ அஸ்ஸுன்னாவோ நிர்ணயிக்கவில்லை. ஆனால் இதற்கு மாற்றமாக தொழுகையைப் பொருத்தவரை அல்லாஹ்வும் அவனின் தூதரும் அதன் எண்ணிக்கை

களையும், அதன் நேரங்களையும், ருகூஉ ஸுஜூதுகளின் நிலைகளையும் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அதே போன்று, ஸகாத் குறித்தும் ஸகாத் கொடுக்க வேண்டிய செல்வம், அதன் அளவுகள் மற்றும் கொடுக்கப்படுவதற்கு தகுதி யானவர்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள்.

அவ்வாரே நோன்பு பற்றியும் அதற்குரிய காலம் மற்றும் ஒரு நாளில் நோன்பு பிடிப்பதற்கான நேர அளவு குறித்தும் ஹஜ்ஜோடு தொடர்பான விடயங்கள் பற்றியும் தெளிவு படுத்தியுள்ளார்கள். அத்துடன் உண்ணல் பருகுதல் மற்றும் உறங்குதலின் ஒழுக்கங்கள் மனைவியுடன் உடலுறவு கொள்ளுதல், அமர்தல், வீட்டிற்குள் பிரவேசித்தல், வெளியே செல்லுதல், மலசலம் கழித்தல், இஸ்திஜ்மார் (சிறுநீர் கழித்தபின் கற்களைப் பயன்படுத்தி சுத்தம் செய்வதில் எத்தனைக் கற்கள் பயன்படுத்துதல் போன்ற வாழ்வின் எல்லா நிலைகளிலும் செய்ய வேண்டிய அற்ப விடயத்திலிருந்து ஆகப் பெரிய விடயம் வரை, எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை அல்லாஹ் தன் மார்க்கத்தின் மூலம் பூரணமாகத் தெளிவுப்படுத்தி தனது விசுவாசிகளுக்கு அருள் புரிந்துள்ளான்.

இது குறித்து அல்லாஹுதஆலா பின்வருமாறு விவரிக் கிறான். *நபியே நாம் உமக்கு யாவற்றையும் தெளிவாக விவரிக்கக் கூடிய இவ்வேதத்தை இறக்கியருளியுள்ளோம்.* (அந்நஹ்ல் 89). மேலும் அல்லாஹு தஆலா '*அல்குர்ஆனில் விவரிக்கப்பட்ட இச்செய்திகள் புனைந்துரைக்கப்பட்டவை அல்ல. மாறாக, இது தனக்கு முன் அருளப்பட்ட (வேதங்*

*களை) உண்மைப்படுத்தக் கூடியதாகவும் அனைத்தையும் விபரிக்கக்கூடியதாகவும் உள்ளது* (யூஸுப் :111)

இருந்தும், மாதவிடாய் தொடர்பான விபரங்களும் அளவு கோள்களும் பற்றி அல்லாஹவின் அருள் மறையிலோ, நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய ஸுன்னாவிலோ எதுவும் கூறப்படவில்லை. ஆகையால், ஒருவர் அவற்றைக் கருத்தில் கொள்ளத் தேவையில்லை என்பது தெளிவாகின்றது. உண்மையில், மாதவிடாயைப் பொருத்தவரையில் முன்னரே குறிப்பிட்டதற்கமைவாக மாதவிடாய் இரத்தம் வெளிவந்துள்ளது அல்லது வெளிவர வில்லை என்பதைப் பொறுத்தே அதன் சட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு குறிப்பிட்ட சட்டப்பிரச்சினை தொடர்பாக அல்லாஹ் வின் அருள் மறையிலோ, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஸுன்னாவிலோ எதுவும் கூறப் படவில்லையாயின் அதனைக் கருத்தில் கொள்ளத் தேவை யில்லை என்ற விதியானது மாதவிடாய் காலத்தை தீர்மா னிப்பது சம்பந்தப்பட்ட சட்டப்பிரச்சினையிலும் ஏனைய சட்டப்பிரச்சினைகளிலும் ஆதாரமாக கொள்வதற்கு முடி யும்.

அதாவது, அல்லாஹ்வின் அருள்மறை அல்குர்ஆன், நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஸுன் னாஹ், ஆகிய அடிப்படை மூலாதாரங்கள் மற்றும் (இஜ்மாஉ) அறிஞர்களின் ஏகோபித்த தெளிவான கருத்து,

அல்லது தெளிவான கியாஸ் ஆகிய துணை மூலாதாரங் களின் அடிப்படையில் தான் ஒரு சட்டத்தை உறுதிப்படுத்த முடியுமே தவிர வேறு அளவுகோள்களின் மூலம் எதனையும் தீர்மானிக்க முடியாது. செய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் தமது சட்டவரை வொன்றில் இவ்வாறு கூறுகின்றார்: மாதவிடாயைப் பொறுத்த வரை, அது தொடர்பாக அல்லாஹ் பல சட்ட திட்டங்களை தனது வேத நூலிலும் நபி வழிமுறையாகிய ஸுன்னாவினூடாகவும் விவரித்துள்ளான்;. ஆயினும், இந்த விடயம் தொடர்பாக முஸ்லிம் சமுதாயம் மிக அவசியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய கட்டாய நிலையில் இருந்தும் கூட, அது பற்றிய குறுகிய கால, நீண்ட கால வரையறை களைக் குறிப்பிடவில்லை.

மேலும், ஒரு பெண் இரண்டு மாதவிடாய்களுக்கு இடையில் எவ்வளவு காலம் சுத்தமாய் இருப்பாள் என வரையறுக்கவு மில்லை. மொழிரீதியாகக் கூட ஹைழ் (மாதவிடாய்) என் பது ஒரு அளவுகோளையோ வேரேதும் விளக்கத்தையோ குறித்துக் காட்டவுமில்லை. ஆகவே எவர் மாதவிடாய் தொடர்பாக கால வரையரையை அல்லது அளவு கோளொன்றை நிர்ணயிக்கிறாரோ அவர் அல்குர்ஆனுக் கும் நபிவழிமுறையான ஸுன்னாவுக்கும் மாறு செய்தவரா வார்.

**ஆதராம் 4 - கியாஸ்:** (இது ஒரு துணை மூலாதாரம் : அல் குர்ஆன், ஸுன்னா, இஜ்மாஉ ஆகிய சட்ட மூலாதாரங்கள் மூலம் அல்லது அவற்றுள் ஒன்று மூலம் ஏற்கனவே பெறப்

பட்ட ஒரு தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு புதிய பிரச்சினையை ஒப்பு நோக்கிக் கண்டறிகின்ற முடிவாகும்) அல்லாஹ் மாதவிடாயை தொல்லை மற்றும் அசௌகரிய மிக்கதும் என விவரித்துள்ளான். எனவேதான், அது ஒரு பெண்ணுக்கு அது உண்டாகி இருப்பது கண்டறியப்பட் டால் அது சுத்தமற்ற நிலையாகும். இதில் - இரண்டாம் முதலாம் நாட்களுக்கிடையில், நான்காம் மூன்றாம் நாட்களுக்கிடையில், பதினாராம் பதினைந்தாம் நாட்களுக் கிடையில், பதினெட்டாம் பதினேழாம் நாட்களுக்கிடையில் என எத்தகைய வேறுபாடும் வித்தியாசமுமில்லை.

எனவே மாதவிடாயும்; அதன் விளைவாக ஏற்படும் தொந்தர வும் இரண்டு நாட்களிலும் ஒரே மாதிரியாக உள்ளது. இங்கு குறித்த காரணமும் சமமாகவே காணப்படுகிறது. இவ்வாறு இரண்டு நாட்களும் தூய்மையற்ற நிலையும் தொந்தரவும் சமமாக இருக்கும் போது சட்டரீதியில் வேறுபடுத்துவது எப்படி சரியாகும்? எனவே, மாதவிடாய் தொடர்பான நடைமுறை காரணிகளைக் கொண்டு இரண்டு நாட்களுக் கும் உரியதான சட்ட முடிவு இருக்கும் பொழுது ஒரு நாளுக்கு ஒன்று என்ற வகையில் அமையப்பெறும் வெவ் வேறான சட்ட முடிவுகள் தெளிவான கியாஸுக்கு எதிரான தாகுமல்லவா? அல்லது காரணங்கள் இரண்டு நாட்களுக் கும் சமமாக இருப்பது ஒரே மாதிரியான சட்ட முடிவுகளை பெற்றுத் தருவது என்ற அடிப்படையில் சரியான கியாஸாக ஆகமாட்டாதா?

**ஆதாரம் 5 :** மாதவிடாய்க்கான குறிப்பிட்ட கால எல்லையை வகுத்துக் கூறுவோரின் உடன்பாடின்மையும் தடுமாற்றாலும் அவற்றிற்குத் தெளிவான ஆதாரமில்லை என்பதை எடுத்துக் கொட்டுகிறது. இவை இஜ்திஹாத் மூலம் கூறப்பட்ட தீர்ப்புகளாகும். இவைகள் பிழையாகவோ சரியாகவோ இருக்க முடியும். இவற்றுள் ஒரு கருத்தை விட மற்றொரு கருத்துக்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டியதுமில்லை. ஆகவே இத்தகைய பிரச்சினைக்குரிய விடயங்களில் அல்குர்ஆனையும் ஸுன்னாஹ்வையும் நோக்கி மீள்வதே எமது கடமையாகும்.

எனவே, மாதவிடாய்க்கு குறுகிய அல்லது நீண்ட கால வரையறை எதுவும் இல்லை என்பதும் அதுவே மிகச் சரியான கூற்று என்பதும் தெளிவாகுமானால் காயம் அல்லது அது போன்ற எவ்விதக் காரணமுமின்றி பெண்கள் இயற்கையாக இரத்தம் வெளிவரக் கண்டால் அதை மாதவிடாய் என்றே கருத வேண்டும். இது தொடர்பாகக் கால வரையறைகள் சார்ந்த அளவுகோள்களையோ வயதெல்லையையோ கருத்திற் கொள்ளக் கூடாது. ஆனால், ஒரு பெண்ணுக்கு இரத்தம் வெளிவருவது நிற்கவில்லையாயின்; அப்பெண் 'இஸ்திஹாழா' நிலையில் இருப்பதாகக் கருதப்படுவாள். (இஸ்திஹாழா என்பது தொடர் உதிரப்போக்கு என்பதாகும்.) இஸ்திஹாழா குறித்த விவரமும் சட்டங்களும் விரிவாக இன்ஷாஅல்லாஹ் பின்னர் குறிப்பிடப்படும்.

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : இஸ்திஹாழா (தொடர் உதிரப்

போக்கு) என்பதை காட்டக் கூடிய அறிகுறிகள் தென்படும் வரையில், கருப்பையிலிருந்து வெளிவரும் அனைத்தும் அடிப்படையில் மாதவிடாயாகவே கருதப்படும்.' அவர்கள் மேலும் குறிப்பிடுகையில், (ஒரு பெண்ணிடமிருந்து) வெளி வரும் இரத்தம் ஒரு காயத்திலிருந்தோ அல்லது ஓர் இரத்த நாலத்திலிருந்தோ வெளிவரவில்லையென்றால் அதனை மாதவிடாய் இரத்தம் என்றே கருத வேண்டும். இக்கூற்றே ஆதாரத்தின் அடிப்படையில் ஒரு உறுதியான கருத்தாகவும், மாதவிடாய்க்கு குறிப்பிட்ட கால எல்லையை வரையரை செய்தோரின் கருத்தை விட விளங்கி, கருத்தில் கொண்டு, இலகுவாக செயல்படுத்தகூடியதாகவுமுள்ளது.

மேலும், இக்கருத்தே இஸ்லாத்தின் உயிரோட்டத்திற்கும் அடிப்படைக்கும் இலகு தன்மைக்கும் இணக்கமாக அமை வதால் ஏற்றுக் கொள்வதற்கு பொருத்தமாக உள்ளது. அல்லாஹுதஆலா கூறுகிறான் *"இம்மார்க்கத்தில் அவன் எந்த ஒரு சங்கடத்தையும் உங்கள் மீது ஏற்படுத்தவில்லை".* (அல் ஹஜ் :78) 'நிச்சயமாக, இந்த மார்க்கம் (பின்பற்று வதற்கு) மிக இலகுவானது. இம்மார்க்கத்தை யாரேனும் சிரமமானதாக ஆக்கிக் கொண்டால் அது அவரை மிகைத்து விடும். எனவே நடு நிலைமையையே மேற்கொள்ளுங்கள். இயன்றவற்றை செய்யுங்கள். நன்மாறாயம் கூறுங்கள்' (ஆதாரம் : புஹாரி)

ஏதாவது இரண்டு விடயங்களுள் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை நபியவர்களுக்கு ஏற்பட்டால், அதுவொரு பாவமான காரியம் இல்லாதவிடத்து, மிக இலகுவான

தையே தெரிவு செய்வது அவர்களின் நற்குணங்களில் ஒன்றாக இருந்தது.

**கருத்தரித்த பெண்ணின் மாதவிடாய் :**

பெரும்பாலான பெண்கள் கருத்தரித்துவிட்டால் அவர்களது மாதவிடாய் நின்றுவிடுகின்றது. இது குறித்து இமாம் அஹ்மத் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்; 'பெண்கள் தாங்கள் கருத்தரித்துள்ளனர் என்பதை மாதவிடாய் நின்று விடுவதன் மூலமே அறிந்து கொள்கின்றனர்' என்று கூறுகிறார்கள். ஒரு கருவுற்ற பெண் பிரசவத்திற்கு குறுகிய காலத்திற்கு முன்னர் அதாவது இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர்; பிரசவ வேதனையுடன் இரத்தம் வெளிவரக் கண்டால் அது 'நிஃபாஸ்' ஆகும்.

சில போது, அவள் தனது பிரசவத்திற்கு அதிக நாட்களுக்கு முன்போ அல்லது சில நாட்களுக்கு முன்போ எத்தகைய பிரசவ வேதனையுமின்றி இரத்தம் வெளிவரக் கண்டால், அது 'நிஃபாஸ்' ஆக கருதப்படமாட்டாது. எனினும்; பிரசவ வேதனையின்றி இரத்தம் வெளிவந்தால் இதனை மாத விடாய் எனக் கருதி மாதவிடாய்க்கான எல்லாச் சட்டங் களையும் பிரயோகிப்பதா? அல்லது 'தமுன் பாஸித்' (மாத விடாய் மற்றும் பிரசவத்தின் பின் வரும் இரத்தம் அல்லாது) எனக்கொண்டு மாதவிடாய்க்குரிய சட்டங்களை பிரயோகிக் காது இருப்பதா? என்பதில் அறிஞர்களிடையே கருத்து முரண்பாடு காணப்படுகிறது. வழக்கமான மாதவிடாய் அமைப்பில் அது இருந்தால் அது மாதவிடாய் என்பதே

சரியான கருத்தாகும். காரணம் ஒரு பெண்ணிடமிருந்து வெளிப்படும் இரத்தமானது மாதவிடாய் சார்ந்தது என்பதை வேறுபடுத்தக் கூடிய ஏதாவது காரணம் காணப்படவில்லை யாயின் அடிப்படையில் அது மாதவிடாய் இரத்தமாகவே கொள்ளப்படும். கர்ப்பிணியான பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்படாது எனச் சுட்டிக் காட்டும் எந்த ஆதாரமும் அல்குர் ஆனிலோ நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர் களுடைய ஸுன்னாவிலோ இல்லை.

இதுவே இமாம் மாலிக் மற்றும் இமாம் ஷாபிஈ ஆகியோர் களது நிலைப்பாடாகும். இதுவே ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா அவர்களதும் தெரிவாகும். அல்இக்தியா ராத் அல் பிக்ஹிய்யா லிஷைஹில் இஸ்லாம் இப்னு தைமியா லதா தலாமீதிஹி என்ற நூலில் அதன் ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்: இதே கருத்தை இமாம் அஹ்மத் அவர்களும் கொண்டிருந்தார் என்றும் இமாம் பைஹகி அவர்கள் குறிப்பிடுகிறார்.

இதன்படி, பின்வரும் இரண்டு முக்கிய விடயங்களில் தவிர, கருவுற்ற ஒரு பெண்ணின் மாதவிடாய்க்கு, சாதாரண மாத விடாய் ஏற்பட்ட பெண்ணின் எல்லாச் சட்டங்களும் பொருத்தமானதாக அமையும்.

முதலாவது விடயம்: விவாகரத்து, கருவுறாத ஒரு பெண்ணை மாதவிடாயின் போது 'தலாக் விவாகரத்து செய்வது ஹராமாக்கப்பட்டுள்ளது. ஆனால் அவள் கரு வுற்றவளாக இருந்தால் தலாக் சொல்வதில் எவ்விதத் தடை

யும் கிடையாது. ஏனெனில் கருவுறாத ஒரு பெண்ணை மாதவிடாயின் போது 'தலாக் விவாகரத்து செய்வது பின் வரும் அல்லாஹுதஆலாவின் கூற்றுக்கு முரணாணதாகும் *'நீங்கள் பெண்களை விவாகரத்து செய்தால் அவர்களின் இத்தாவைக் கணக்கிடக்கூடிய (மாதவிடாய் அல்லாத) காலத்தில் விவாகரத்துச் செய்யுங்கள்'* (அத்தலாக் :1)

கருவுற்ற ஒரு பெண்ணை மாதவிடாயின் போது தலாக் விவாகரத்து செய்வது அல்லாஹ்வின் மேற்படி கூற்றுக்கு முரணாணது அல்ல. ஏனெனில் யார் கருவுற்ற ஒரு பெண்ணை விவாகரத்து செய்கிறானோ அவளுக்கு மாதவிடாய் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவளின் விவாகரத்து காலத்தில்தான் விவாகரத்து செய்துள்ளான். ஏனெனில் அவளது இத்தா கருவுற்றுள்ள காலத்தின் மூலமே கணிப்பிடப்படுகிறது. இதனடிப்படையில் ஒரு பெண்ணை உடலுறவின் பின் விவாகரத்து செய்வதில் எவ்விதத் தடையும் கிடையாது.

இரண்டாவது விடயம் : கருவுற்ற ஒரு பெண்ணின் மாத விடாய் காலமானது ஏனையோரின் மாதவிடாய் சுழற்சி போன்று முடிவடையமாட்டாது. அதாவது கருவுற்ற பெண் ணின் இத்தா அவளுடைய பிரசவத்துடன் முடிவடை கின்றது. அக்கால எல்லையில் அவளுக்கு மாதவிடாய் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதுவே சட்டமாகும். இது குறித்து அல்லாஹு தஆலா பின்வருமாறு குறிப்பிடுகிறான். *'இன்னும் கர்ப்பிணிகளுக்குரிய இத்தாக் கால எல்லை அவர்கள் குழந்தை பெற்றெடுக்கும் வரையிலாகும்.'*

## மூன்றாம் பகுதி :

# மாதவிடாய் மாற்றங்கள்/ வித்தியாசங்கள்

மாதவிடாயில் அவ்வப்போது பல்வேறு மாற்றங்கள் ஏற்படு வதை அவதானிக்க முடியும். அது பல வகைப்படும்

**முதலாவது வகை:** மாதவிடாய் ஏற்படும் நாட்கள் கூடுதல் அல்லது குறைதல்.; உதாரணமாக ஒரு பெண்ணின் வழமை யான மாதவிடாய் நாட்கள் சாதாரணமாக ஆறு நாட்கள் வரை இருக்கும். பின் அந்த கால எல்லை ஏழாவது நாள் வரை நீடிக்கும். அல்லது ஏழு நாட்கள் வரை நீடிக்க வேண் டிய கால எல்லை ஆறாவது நாளுடன் முடிவடையும்.

**இரண்டாவது வகை :** குறித்த காலத்திற்கு முன் வருதல் அல்லது தாமதித்து வருதல். உதாரணமாக: வழமையாக ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஒவ்வொரு மாதத்தின் இறுதியில் ஏற்படும். ஆனாலும் அதை மாதத்தின் ஆரம்பத்தில் காண் கிறாள். அல்லது அதற்கு நேரெதிராக அவளின் வழமை யான மாதவிடாய் மாத ஆரம்பத்தில் இருக்க அதனை மாத இறுதியில் வரக் காண்கிறாள்.

இந்த இரண்டு நிலை தொடர்பான இறை மார்க்கத்தின் முடிவு என்ன என்பதில் அறிஞர்கள் கருத்து முரண்படு கின்றனர். இது பற்றிய மிகவும் சரியான நிலைப்பாடு

என்னவெனில், அவள் எப்பொழுது இரத்தத்தைக் காண்கின் றாளோ அப்பொழுது அதை மாதவிடாய் எனக் கருத வேண் டும்; எப்பொழுது இரத்தம் நின்று சுத்தமடைகின்றாளோ அப்பொழுது தூய்மை அடைந்து விட்டதாகக் கருத வேண் டும். இதில் நாட்கள் கூடிக் குறைதல் என்பதையோ குறித்த காலத்திற்கு முன் வருதல் அல்லது தாமதித்து வருதல் என்பதையோ கருத்திற் கொள்ளத் தேவையில்லை. முன் சென்ற பகுதியில் குறிப்பிட்டது போன்று மாதவிடாய் பற்றிய சட்டங்கள் யாவும் 'மாதவிடாய் காணப்படுவது' என்பதுடன் சம்பந்தப்பட்டுள்ளது. இது இமாம் ஷாபிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்களின் நிலைப்பாடாகவும் ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ் அவர்களின் தெரிவாகவும் காணப்படுகிறது.

முஃனி என்ற நூலின் ஆசிரியரும் (இமாம் இப்னு குதாமா அல் மக்திஸி) இந்தக் கருத்தைப் பலப்படுத்தி ஆதரவளித் துள்ளார். அவர்கள் இவ்வாறு தனது கருத்தை குறிப்பிடு கிறார்கள்: மேலே மத்ஹபில் குறிப்பிடப்பட்டது போன்று வழமை கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என்றிருந்தால் அதனை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தெளிவுபடுத்தியிருப்பார்கள், தெளிவுபடுத்த வேண்டிய ஒரு விடயத்தை தெளிவுபடுத்தாது பிற்படுத்துவது நபியவர் களுக்கு அனுமதிக்கப்படாத விடயமாகும். தெளிவுபடுத்த வேண்டிய ஒரு விடயத்தை கால தாமதம் செய்வது கூடாது. காரணம் மாதவிடாய் தொடர்பான விடயங்கள் குறித்த விளக்கம் எல்லா நேரத்திலும் அவர்களின் மனைவியருக்கும்

தேவைப்பட்டது. அவ்வாறிருந்தும் அதனை தெளிவுபடுத் தாது அவர்கள் இருக்கவில்லை. மாதவிடாய் தொடர்பான விவகாரத்தில் கால வரையரை தொடர்பாக தொடர் உதிரப் போக்குள்ள பெண்ணுக்கான வரையரையே நபி ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மூலம் குறிப்பிடப் பட்டுள்ளது.

**மூன்றாவது வகை :** காயங்களிலிருந்து வடியும் சீழ் போன்றுள்ள மஞ்சல் நிறமுடைய அல்லது மஞ்சல் மற்றும் கறுப்பு நிறங்களுக்கு இடையிலான கலங்களான நிலையில் மாதவிடாய் காலத்தின் போது இவ்வாறு ஏதும் வெளிப்படு மானால் அல்லது அதற்கு அடுத்தாற் போன்று சுத்த நிலையை அடைவதற்கு முன்போ இது நிகழுமானால், இதை மாதவிடாய் என்று கருதுவதோடு மாதவிடாய் தொடர்பான அனைத்து சட்டங்களையும் பின்பற்ற வேண்டும்;. சிலவேளை, இத்தகைய ஏதும் சுத்தத்தை அடைந்ததன் பின் நிகழுமாயின், அந்நிலையை மாதவிடாய் எனக் கருதலாகாது. இதனை உம்மு அதிய்யா ரழியல் லாஹு அன்ஹா அவர்களின் கூற்றிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

உம்மு அதிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறு கிறார்கள் 'சுத்தமானதின் பின் வெளிவரும் மஞ்சல் மற்றும் பழுப்பு நிறங்களை நாம் மாதவிடாயாகக் கருதுவதில்லை.' புஹாரியில் 'சுத்தம் அடைந்ததன் பின்' என்ற கூற்று இன்றி அறிவிக்கப்பட்டுள்ளது. என்றாலும் இமாம் புஹாரி அவர்கள் மாதவிடாய் அல்லாத நாட்களில் வெளிவரும்

மஞ்சல் மற்றும் பழுப்பு நிறங்கள் பற்றிய பாடம் என குறித்த ஹதீஸிற்கு தலைப்பிட்டுள்ளார்கள்.

புஹாரி விரிவுரையான பத்ஹுல் பாரியில் இமாம் இப்னு ஹஜர் அல் அஸ்கலானி அவர்கள் இவ்வாறு குறிப்பிடு கிறார்கள்: 'நீங்கள் வெள்ளைப்படுதலை காணும் வரையில் என்ற இதற்கு முன்னர் குறிப்பிடப்பட்ட ஆஇஷா ரழியின் ஹதீஸையும் இந்தத் தலைப்பில் குறிப்பிடப்பட்ட உம்மு அதிய்யா அவர்களின் ஹதீஸையும் இணைத்து இங்கு மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதாவது ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸ் மாதவிடாய் நாட்களில் மஞ்சல் மற்றும் பழுப்பு நிறத்தைக் கண்டால் ஒரு பெண் மாதவிடாய் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும். அது அல்லாத நாட்களில் அதாவது சுத்தத்தின் பின் இவற் றைக் கண்டால் அவை மாதவிடாயாகக் கருதப் பட மாட் டாது என்ற உம்மு அதிய்யா அவர்களின் ஹதீஸை பின் பற்ற வேண்டும். இங்கு ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸ் மேற்குறிப்பிட்ட தலைப்பிற்கு முன் உறுதிமிக்க முஅல்லகான ஹதீஸாக இமாம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

சில பெண்கள் (மாதவிடாயின் அடையாளங்கள் ஏதும் எஞ்சியுள்ளதா அதாவது சுத்தம் அடைந்துவிட்டோமா இல் லையா என்பதை அறிந்து கொள்ளவென) மாதவிடாயின் மஞ்சள் நிறத்தில் அடையாளம் உள்ள தமது பருத்தியை ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு அனுப்பி வைப்பார்கள். (அப்பொழுது) ஆஇஷா (ரழி) அவர்கள்

'நீங்கள் 'அல்குஸ்ஸத்துல் பைழாவை' வெள்ளை நீரைக் (திரவத்தை) காணும் வரையில் அவசரப்படாதீர்கள் என்று அறிவுரை கூறுவார்கள். அதாவது மாதவிடாய் முற்றாக நீங்கும் வரை என்பது இதன் கருத்தாகும். 'அல்குஸ்ஸத்துல் பைழா' என்பது மாதவிடாய் நின்றுவிடும்போது கருப்பையி லிருந்து வெளிவரும் வெள்ளை திரவத்தைக் குறிக்கும்.

**நான்காவது வகை:** மாதவிடாய் ஒழுங்கின்மை (மாதவிடாய் விட்டு விட்டு வருதல்). அதாவது ஒருநாள் இரத்தம் வெளி வருவதையும்; (மாதவிடாய் நிலை) மறுநாள் அது நின்று சுத்தமாகிய நிலையையும் காண்கிறாள் இது தொடர்பாக இரண்டு நிலைகளை அவதானிக்க முடிகிறது.

முதலாவது நிலை : இத்தகைய ஒழுங்கின்மை எல்லா நேரங்களிலும் இடம் பெருமாயின், அப்போது வெளிவரும் இரத்தம் இஸ்திஹாழாவாகும் (தொடர் உதிரப்போக்கு). இவ்வேளை இஸ்திஹாழாஹ்வுக்குரிய எல்லா சட்டங்களும் பேணப்படும்.

இரண்டாவது நிலை : இவ்வொழுங்கின்மை தொடராக அன்றி சிற்சில நேரங்களில் இடம் பெரும். அவள் சுத்தமாக இருக்கும் நேரத்தில் காணப்படும். எனவே, இது உண்மையி லேயே மாதவிடாய்க்கான சட்டங்கள் பொருந்தாத சுத்த முடைய காலமா? அல்லது அது மாதவிடாய்க் காலத்தின் ஒரு பகுதியா என அறிஞர்கள் கருத்து முரண்படுகின்றனர்.

இமாம் ஷாஃபிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்களின் இரு கூற்றுகளில் மிகச் சரியான கூற்றின் படி அது மாதவிடா

யாகும். இவ்வேளை மாதவிடாய்க்கான சட்டங்களை அப்பெண் பின்பற்ற வேண்டும். இது ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுமுல்லாஹ் இமாம் ஸாஹிபுல் பாஇக் இப்னு காழி அல் ஜபல் போன்றோரினது தெரிவாக வும். இமாம் அபூ ஹனீபா ரஹிமஹுமுல்லாஹ், அவர்களது மத்ஹபின் கருத்தும் இதுவே. ஏனெனில் 'குஸ்ஸதுல் பைழா' வெள்ளை நீர் காணப்படவில்லை. அது 'துஹ்ர்' சுத்த நிலையாக இருந்திருந்தால் அதற்கு முன்னரும் பின்ன ரும் மாதவிடாயாக இருந்திருக்க வேண்டும் அவ்வாறு யாரும் குறிப்பிடமாட்டார். அவ்வாறெனில் இத்தா ஐந்து நாட்களுக்குள் முடிந்துவிடும். அதனை தூய்மையானதாக கொள்வதற்கு முற்பட்டால் ஒவ்வொரு இரண்டு நாட்களுக் கும் இடையில் குளிக்க வேண்டும். அது பெறும் சிரமத்தை யும் கஷ்டத்தையும் ஏற்படுத்தும். சிரமத்தை நீக்குவதே இஸ்லாமிய ஷரீஆவின் நோக்கமாகும். புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது.

மேலும் ஹன்பலி மத்ஹபின் மிகப்பிரபல்யமான கருத்தா வது, இரத்தம் வருவது மாதவிடாயாகும். அது நின்று விட்டால் அது தூய்மையான நிலையாகும். மாதவிடாய் காலமும் தூய்மையடையும் காலமும் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியை கடந்து விட்டால், அதை இஸ்திஹாழா தொடர் உதிரப்போக்கு வந்த நாட்களாக கருதவேண்டும்.

(ஹம்பலி மத்ஹபின் பிக்ஹ் நூலான) அல் முஃனியின் ஆசிரியர் இவ்வாறு கூறுகின்றார் 'ஒரு நாளை விடவும் குறைவாக இரத்தம் நிற்குமாயின் அவள் தெளிவான

ஆதாரத்தைக் கண்டாலன்றி அதைத் 'தஹாரா' (சுத்தம்) உடைய நிலை எனக் கருத முடியாது. இது குறித்து நிபாஸ் பற்றிய இமாம் அஹ்மத் ரஹிமஹுல்லாவின் அறிவிப்பை மேலே குறிப்பிட்டிருந்தோம். இதுவே சரியான கருத்தாகும். அதே போன்று குறிப்பிட்ட நேரத்தில் வருவதும் பின்னர் நின்றுவிடுவதும் என்ற நிலைக்கு அடிக்கடி குளித்து சுத்த மாகிக் கொள்ள வேண்டும் என கட்டாயப்படுத்துவதில் சிரமம் இருக்கிறது, மார்க்கத்தில் இச்சிரமம் இல்லை.

அல்லாஹு தஆலா பின்வருமாறு குறிப்பிடுகிறான் '*மார்க் கத்தில் எவ்விதச் சிரமத்தையும் அவன் ஏற்படுத்தவில்லை*' (அல் ஹஜ் :78) தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில், ஒரு பெண் தனது வழமையான மாதவிடாயின் இறுதியில் மாத விடாய் நின்றுவிடுதல் அல்லது வெள்ளை நீரைக் காணுதல் என்ற இரு காரணங்களும் அல்லாது ஒரு நாளைக்கு குறை வான காலப்பகுதியில் இரத்தம் நின்று விடுவதை அவதா னித்தால்; அது துஹ்ர் சுத்த நிலையை அடைந்ததாக கருதப் படமாட்டாது.

'முஃனி' என்ற நூல் ஆசிரியரின் இக்கூற்று, மேற்காணும் இரண்டு கருத்துக்களுக்கும் இடைப்பட்ட நடுநிலையான கருத்தாகும். மிகச் சரியானதை அல்லாஹ்வே நன்கறிந்த வன்! எனக் கூறுகிறார்.

**ஐந்தாவது வகை :** இரத்தம் வரண்டு காணப்படுதல். அதா வது ஈரமான திரவம் வெளியேறுவதைக் காண்கின்றாள். இவ்வாறு மாதவிடாயின் போது நிகழுமாயின் அல்லது சுத்த

நிலையை அடைய முன் அதனுடன் தொடர்புற்று இருக்கு மாயின் அப்பொழுது அது மாதவிடாயாகக் கருதப்படும். சுத்தத்தின் பின்னர் அது நிகழுமாயின் அப்பொழுது அது மாதவிடாயாக கருதப்படமாட்டாது. ஏனெனில் இதன் உச்சகட்ட நிலமை, மஞ்சல் மற்றும் பழுப்பு நிறமாக வெளி வரும் திரவம் போன்றதே. எனவே, அதற்குறிய சட்டமே இதற்குமாகும்.

*

# நான்காம் பகுதி:

# மாதவிடாய் தொடர்பான சட்டங்கள்

மாதவிடாய் தொடர்பாக இருபதற்கு மேற்பட்ட சட்டங்கள் காணப்படுகின்றன. இங்கு மிக அவசியமானவற்றை மட் டும் குறிப்பிடுவது போதுமானது எனக் கருதுகின்றோம். அவற்றுள் பின்வருவன முக்கியமானவை :

**முதலாவது: (அஸ்ஸலாத்)** தொழுகை பெண்களுக்கு மாத விடாய் ஏற்பட்டிருக்கும் போது பர்ளான மற்றும் ஸுன்னத் தான தொழுகைகளை தொழுவது தடை செய்யப்பட்டுள் ளது (ஹராமாகும்). அவ்வாறு நிறைவேற்றினால் அது நிறை வேற மாட்டாது. அதே போன்று குறிப்பிட்ட ஒரு தொழு கைக்குரிய நேரத்தில், அத்தொழுகையின் பூரணமான ஒரு ரக்அத்தைப் நிறைவேற்றுவதற்குரிய நேரத்தை அடைந்து கொண்டால் மாத்திரம் அத்தொழுகையை நிறைவேற்றுவது கட்டாயமாகும். அது ஆரம்ப நேரமாகவோ அல்லது இறுதி நேரமாகவோ இருக்கலாம். இதை விரிவாகக் காண்பதற்கு கீழ்க் காணும் உதாரணங்களை பார்ப்போம்.

ஆரம்ப நேரம் என்பதற்கான உதாரணம் : ஒரு பெண்ணுக்கு சூரியன் மறைந்த பின்னர் மாதவிடாய் ஏற்படுகிறது. அவ் வேளையில் மஃரிப் தொழுகையின் ஒரு ரக்அத்தை நிறை வேற்றும் அளவு காலம் அவள் சுத்தமாக இருந்திருந்தாள்,

அதற்காக அவள் பூரண சுத்தம் அடைந்த பின் அந்த மஃரிப் தொழுகையை நிறைவேற்றுவது அவசியமாகும். ஏனெனில் அவள் மாதவிடாய் ஏற்படுவதற்கு முன் ஒரு ரக்அத் தொழுவதற்கான கால அவகாசத்தை பெற்றுக் கொண்டாள்.

இறுதி நேரம் என்பதற்கான உதாரணம்: ஒரு பெண்ணுக்கு சூரியன் உதயமாகுமுன்னர் ஃபஜ்ர் தொழுகையின் ஒரு ரக்அத் தொழுவதற்குரிய நேரம் எஞ்சியிருக்கின்ற நிலையில் மாதவிடாய் நின்று விடுகின்றது. அவள் தன்னைச் சுத்தப் படுத்திக் கொண்ட பின்னர் ஃபஜ்ர் தொழுகையைப் பூரண மாக நிறைவேற்றுவது அவசியமாகும். ஏனெனில் அவள் மாதவிடாய் ஏற்படுவதற்கு முன் ஒரு ரக்அத் தொழுவதற் கான கால அவகாசத்தை பெற்றுக் கொண்டாள்.

எனினும், அவளுக்கு தொழுகையின் ஒரு ரக்அத்தை நிறை வேற்றுவதற்குரிய காலம் -நேரம்- கிடைக்காதிருந்தால் அவள் மீது அத் தொழுகையை நிறைவேற்றுவது அவசிய மில்லை. அதாவது மேலே குறிப்பிடப்பட்ட முதல் உதார ணத்தில் உள்ளதைப் போன்று சூரியன் மறைந்தன் பின் மற் றத் தொழுகைக்கான நேரம் நுழைவதற்கு ஒரு நொடிப் பொழுது இருந்தால் அல்லது இரண்டாவது உதாரணத்தில் உள்ளதைப் போன்று சூரியன் உதயத்திற்கு ஒரு நொடிப் பொழுது இருக்கும் நிலையில் அவள் சுத்தமடைந்தாள் அத் தொழுகைகளை நிறைவேற்றுவது அவசியமில்லை. இதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸ் காணப்படுகிறது. யார் தொழு கையில் ஒரு ரக்அத்தையேனும் அடைந்து கொள்கிறாரோ அவர் அத்தொழுகையை முழுமையாக அடைந்து கொண்ட

வராவார். (புஹாரி, முஸ்லிம்) எனவே, ஒரு ரக்அத்தை விட குறைவான அளவை அடைந்தால் அவர் அத்தொழுகையை அடைந்தவராகக் கருதப்படமாட்டார் என்பது இந்த ஹதீதின் மூலம் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

சிலவேளை, ஒரு பெண் அஸர் தொழுகையின் ஒரு ரக்அத்தை அத்தொழுகைக்குரிய நேரத்தில் அடைந்து கொண்டால் அப்பொழுது அவள் லுஹர் தொழுகையை அஸர் தொழுகையுடன் தொழுவது கட்டாயமாகுமா? அல்லது ஒரு பெண் இஷா தொழுகையின் ஒரு ரக்அத்தை அத் தொழுகைக்குரிய நேரத்தில் அடைந்து கொண்டாள் அப்பொழுது அவள் மஃரிப் தொழுகையை இஷா தொழுகையுடன் தொழுவது கட்டாயமாகுமா?

இதில் அறிஞர்கள் மத்தியில் கருத்து முரண்பாடு காணப்படுகிறது. இது தொடர்பான சரியான நிலைப்பாடு, அவள் எத்தொழுகையின் நேரத்தை அடைந்து கொண்டாளோ அதை மாத்திரமே நிறைவேற்ற வேண்டும். எனவே, அஸர் தொழுகையையும் இஷா தொழுகையையும் மாத்திரமே நிறைவேற்ற வேண்டும். இதற்கு பின்வரும் நபிமொழி ஆதாரமாக அமைந்துள்ளது. நபி ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : "சூரியன் மறைவதற்கு முன்னர் அஸர் தொழுகையின் ஒரு ரக்அத்தை எவர் அடைந்து கொள்கின்றாரோ அவர் அஸர் தொழுகையை அடைந்து கொண்டவராவார்". (புஹாரி, முஸ்லிம்) இந்த ஹதீஸில் நபியவர்கள்; லுஹர் மற்றும் அஸர் தொழுகையை அடைந்து கொண்டார் எனக் குறிப்பிடவில்லை. அதே

போல் லுஹர் தொழுகை அவர் மீது கட்டாயம் எனவும் குறிப்பிடவில்லை. காரணம் "அடிப்படையில் ஒரு காரி யத்தை செய்வதற்கான ஆதாரம் இல்லையென்றால் அப் பொறுப்பிலிருந்து ஒருவர் விடுபடுகிறார்" என்பது சட்ட விதியாகும்.

இமாம் மாலிக், இமாம் அபூஹனிஃபா (ரஹிமஹுமல்லாஹ்) மத்ஹப் நிலைப்பாடும் இதுவே. இதனை (இவ்விருவரின் இந்நிலைப்பாட்டை) இமாம் நவவி அவர்கள் மஜ்மூஃ எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். தக்பீர்: அல்லாஹு அக்பர் (அல்லாஹ்வே மிகப் பெரியவன்), தஸ்பீஹ்: சுப்ஹானல் லாஹ் (அல்லாஹ் மிகத்தூய்மையானவன்), தஹ்மீத்: அல் ஹம்துலில்லாஹ் (புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே), உணவருந்தும் போது பிஸ்மில்லாஹ் கூறுவது, ஹதீஸ் மற்றும் பிக்ஹ் வாசிப்பது, பிரார்த்தனை செய்வது, அதற்கு ஆமீன் கூறுவது, அல்குர்ஆனை செவிமடுப்பது போன்றன அவள் மீது தடுக்கப்பட்டது அல்ல.

புஹாரி முஸ்லிம் மற்றும் ஏனைய கிரந்தங்களில் பின்வரும் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. 'ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மாதவிடாயாக இருக்கும் நிலையில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அன்னாரின் மடிமீது சாய்ந்து கொண்டு அல்குர்ஆன் ஓதுபவர்களாக இருந்தார்கள்' அதே போன்று ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிமில் பின்வரும் ஹதீஸும் பதிவு செய்யப்பட்டுள்ளது. உம்மு அதிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், தான் நபியவர்கள் கூறுவதை செவிமடுத்ததாக கூறுகிறார்கள் :

"திரைக்குப் பின்னால் இருக்கும் மணமாகாத இளம் கன்னி பெண்களும், நன்கு வளர்ந்த பெண்பிள்ளைகளும், மாத விடாய் ஏற்பட்ட பெண்களும் இரு பெருநாட் தொழுகைக்கு வெளியே வந்து நற்காரியங்களில் பங்கெடுக்க வேண்டும். அத்துடன் இறை விசுவாசிகளின் பிரார்த்தனைகளிலும் கலந்துகொள்ள வேண்டும். ஆனால், மாதவிடாய் உண் டான பெண்கள் முஸல்லாவை (தொழும் இடத்தை) விட்டு ஒதுங்கி இருக்க வேண்டும்." மாதவிடாய் உண்டான ஒரு பெண், தனது நாவால் ஓதாது நேரடியாகப் பார்த்தோ அல் லது உள்ளத்தால் சிந்தித்தோ (அமைதியாக) குர்ஆனை ஓது வதற்கு அனுமதி உண்டு.

இமாம் நவவி அவர்கள் ஷர்ஹுல் முஹத்தப் என்ற நூலில் மேற்குறிப்பிட்டது போன்று அல்குர்ஆனை ஓதுவது அனை வராலும் அனுமதிக்கப்பட்டது என்றும் நாவால் உச்சரித்து தெளிவாக ஒதுவதை பெரும்பாலான அறிஞர்கள் தடை செய்துள்ளனர் என்றும் அது அனுமதிக்கப்படவில்லை என் றும் குறிப்பிடுகிறார். எனினும், இமாம்களான புகாரி, இப்னு ஜரீர் அத்தபரீ, இப்னுல் முன்திர் (ரஹிமஹுமுல்லாஹ்) ஆகியோர் அதனை (வாயால் மொழிந்து ஓது வதை) ஆகுமெனக் கூறியுள்ளனர்.

மற்றும் இமாம் மாலிக் அவர்களும் இமாம் ஷாபிஈ அவர்கள் தனது பழைய தீர்பிலும் இக்கருத்தை கொண்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இமாம் புஹாரி அவர்கள் இப்ரா ஹீம் அந்நகஈ அவர்களின் தகவலை முஅல்லகான செய்தி யாக பதிவு செய்துள்ளார். அதில் 'அல்குர்ஆன் வசனங்களை

ஓதுவதில் எவ்விதப்பிரச்சினையும் கிடையாது' என்ற கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா அவர்கள் தனது மார்க்கத்தீர்புகள் (அல் பதாவா) நூலில் பின்வருமாறு கூறுகிறார்கள்: 'அடிப்படையில் மாதவிடாய் ஏற்பட்ட ஒரு பெண் அல்குர்ஆன் ஓதுவதை தடை செய்யும் எந்த நபிவழிகாட்டலையும் காணக் கிடைக்கவில்லை.

அத்துடன், 'மாதவிடாய் ஏற்பட்ட ஒரு பெண்ணும், ஜனாபத்துடன் இருக்கும் ஒருவரும் அல்குர்ஆனில் எதையும் ஓதக் கூடாது' என்ற ஹதீஸ், ஹதீஸ் கலை பற்றிய ஆழ்ந்த புலமை உள்ளவர்களது ஏகோபித்த முடிவின்படி பலவீனமானதாகும். உண்மையில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்து பெண்களுக்கும் மாதவிடாய் இருக்கவே செய்தது. தொழுகையைப் போன்று குர்ஆன் ஓதுவது தடை செய்யப்பட்டிருந்தால், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது சமூகத்திற்கு அதை நன்கு தெளிவுபடுத்தியிருப்பார்கள். அவர்களது தூய மனைவியர் இதை அறிந்துவைத்து, மக்களுக்கு அறிவித்திருப்பார்கள். எனவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதனை தடை செய்ததாக எவரும் அறிவிக்காத நிலையில், அதனை ஹராம் எனச் சொல்ல நமக்கு ஆகாது.

என்றாலும் 'இந்த விடயம் (மாதவிடாய் காலத்தில் பெண்கள் குர்ஆன் ஓதுவது) தொடர்பாக அறிஞர்கள் மத்தியில் சர்ச்சை இருப்பதால் மாதவிடாய் உண்டான ஒரு பெண்

அல் குர்ஆனை ஒப்புவித்து பாடம் நடாத்தும் ஆசிரியை யாகவோ, ஒரு பரீட்சைக்குத் தமது பாடங்களைத் தயார் செய்பவளாகவோ இருக்கும் நிலை போன்ற தவிர்க்க முடி யாத நிலைகளில் அன்றி மற்றைய நிலைகளில் குர்ஆனைத் தனது நாவினால் ஓதாமல் இருப்பதே மிகவும் ஏற்றமான தாகும்'

**இரண்டாவது : (அஸ்ஸவ்ம்) நோன்பு நோற்றல் :** மாத விடாய் ஏற்பட்ட ஒரு பெண் பர்ளான மற்றும் ஸுன்னத் தான, நோன்பு நோற்பதை விட்டும் தடுக்கப்பட்டுள்ளாள். அவ்வாறு அவள் நோன்பு நோற்றாலும் அது நிறைவேறாது. ஆனால் விடுபட்ட நாட்களின் கட்டாய (பர்ழான) நோன்பு களை நோற்பது கடமையாகும், இதற்கு ஆதாரமாக ஆஇஷா ரழியல்லாஹுஅன்ஹா அவர்களின் பின்வரும் ஹதீஸ் காணப்படுகிறது. "எமக்கு மாதவிடாய் ஏற்படும், அப்பொழுது நாம் எமது நோன்புகளைப் கழாச் செய்யுமாறு ஏவப்பட்டோம். ஆனால், தொழுகையைப் கழாச் செய்ய ஏவப்படவில்லை. (புஹாரி முஸ்லிம்)

ஒரு பெண் நோன்பு நோற்றிருக்கும் நிலையில், சூரியன் மறைவதற்கு ஒரு நொடிப்பொழுது முன்னால் அவளுக்கு மாதவிடாய் ஏற்பட்டாலும் அவளது நோன்பு வீணாகி விடும் (நிறைவேறாது). எனவே குறிப்பிட்ட நோன்பு பர் ழாக இருந்தால் அவள் சுத்தமான பின் அந்த நோன்பை மீண்டும் நோற்றாக – கழாச்செய்தாக - வேண்டும்

அதே நேரம், சூரியன் மறைவதற்கு முன்னால் மாதவிடாயை உணர்கிறாள்; ஆனால் சூரியன் மறைந்த பின்னரே இரத்தம் வெளிவருகிறது என்றால் இந்நிலையில், இது தொடர்பான மிகச் சரியான முடிவு என்னவெனில் அவளது நோன்பு பூரணமாகிவிடுவதுடன் அது வீணாகி விடமாட்டாது. ஏனெனில், பெண்ணின் உடலினுள்ளே இருக்கும் இரத்தத்திற்கு எவ்வித சட்டங்களும் கிடையாது.

ஒரு பெண்ணுக்கு கனவில் ஸ்கலிதமானால் குளிப்பது கடமையா?' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள்: ஆம், அவள் நீர் வெளியேறியிருக்கக் கண்டால் என பதில் அளித்தார்கள். 'இதிலிருந்து, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்; ஏதும் வெளிவருவதை நிதர்சனமாகக் காண்பதை வைத்து சட்டம் வகுத்துள்ளார்களே தவிர வெளிவருவதாக உணர்வதை மாத்திரம் வைத்து சட்டம் வகுக்கவில்லை என்பது தெளிவாகின்றது. அதேபோன்றுதான் மாதவிடாயைப் பொறுத்தவரையிலும் ஏதும் வெளியாவதை நிதர்சனமாகக் காண்பதைப் பொறுத்தே அதற்குரிய சட்டம் உறுதிப்படுத்தப்படுகிறது.

ஒரு பெண்ணின் மாதவிடாய் காலம் (ஃபஜ்ர்) வைகறை உதயத்தின் பின்னரும் தொடர்ந்து இருந்து, வைகறை உதயமாகி ஒரு நொடிப்பொழுதில் அவள் சுத்தமாகி விட்டாலும் அவளது அன்றைய நோன்பு நிறைவேறாது.

அவள் ஃபஜ்ருக்கு முன் சுத்தமாகி நோன்பும் நோற்று, ஃபஜ்ர் பிந்தி பர்ழான கட்டாயக் குளிப்பைக் குளித்தாலும் அவளுடைய நோன்பு ஏற்கத்தக்கதாகும். ஜனாபத் ஏற்பட்ட ஒருவரின் நிலைமையை ஒத்ததாகவே இந்த நிலையும் காணப்படுகிறது ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர் கள் கூறினார்கள்: 'நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குடும்ப வாழ்வில் ஈடுபட்டு பெருந்தொடக்கு நிலையில் எழுந்து ரமழான் மாதத்தில் நோன்பு நோற்கக் கூடியவர்களாக இருந்தார்கள். (புஹாரி முஸ்லிம்)

**மூன்றாவது: தவாஃப் செய்தல்.** மாதவிடாய் ஏற்பட்ட பெண் கள் பர்ழான மற்றும் சுன்னத்தான தவாஃபை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு செய்தால் அது நிறை வேறாது. ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு ஹஜ்ஜின் போது மாதவிடாய் ஏற்பட்டது. அப்பொழுது அவர்களுக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "ஹாஜிகள் செய்யும் கிரி யைகளை செய்வீராக. ஆனால் சுத்தமாகும்வரையில் தவாப் செய்ய வேண்டாம்" என்றார்கள்.

இது தவிர்ந்த ஹஜ்ஜுடன் தொடர்பான ஏனைய கடமைக ளான ஸஈ செய்தல், அரபாவில் தரித்தல், முஸ்தலிபா மற் றும் மினாவில் இரவில் தங்குதல், ஜம்ராவில் கல்லெறிதல் போன்ற விடயங்களை செய்வது அவளுக்கு தடுக்கப்பட்டது அல்ல. இதன் அடிப்படையில் ஒரு பெண் சுத்தமாக இருக் கும் நிலையில் தவாப் செய்து பின் தவாப் முடிந்ததும் மாத விடாய் ஏற்பட்டால் அல்லது ஸஈ செய்யும் போது மாத

விடாய் ஏற்பட்டால் அவளின் தவாபும் ஸஃயும் நிறைவேறிவிடும்.

**நான்காவது : தவாபுல் வதாஃவை (பிரியாவிடை தவாப்) விட்டுவிடுவதற்கு அனுமதி.** ஒரு பெண் ஹஜ் உம்ரா ஆகிய கிரியைகள் யாவற்றையும் நிறைவேற்றிவிட்டு தனது சொந்த ஊருக்கு புறப்பட்டுச் செல்ல முன் மாதவிடாய் ஏற் பட்டு, அது ஊருக்கு புறப்பட்டுச் செல்லும் வரை நீடிக்கு மாயின், அவள் தவாபுல் வதாஃ (பிரியாவிடை தவாஃபை) நிறைவேற்றாமலேயே செல்வதற்கு அனுமதியுள்ளது. இதற்கு ஆதாரமாக பின்வரும் இப்னு அப்பாஸ் ரழியல் லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவித்த ஹதீஸ் ஆதாரமாக உள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர் கள், மக்கள் ஹஜ்ஜிலிருந்து செல்ல நாடினால் இறுதியாக தவாபுல் வதாவை செய்யுமாறு கட்டையிட்டார்கள். என்றா லும் மாதவிடாயுள்ள பெண்ணுக்கு இதில் சலுகை வழங்கி னார்கள். (புஹாரி, முஸ்லிம்)

வணக்கவழிபாடுகள் யாவும் அல்குர்ஆன் அஸ்ஸுன்னா வின் ஆதாரத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ள தால் மாதவிடாய் ஏற்பட்ட ஒரு பெண் மக்காவை விட்டு செல்லும் வேளை புனித மஸ்ஜிதின் அருகில் சென்று பிரார்த்தனையில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கதல்ல. இவ் வாறு செய்வது தொடர்பாக நபியவர்களின் எந்த வழிகாட் டலும் கிடைக்கவில்லை. ஏனெனில், இது நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து வந்த வழி காட்டல் இதற்கு மாற்றமாக உள்ளது.

ஸபிய்யா ரழியல்லாஹுஅன்ஹா அவர்களுக்கு தவாஃபுல் இஃபாழாவின் பின் மாதவிடாய் ஏற்பட்டது. அப்போது அவர்களுக்கு நபியவர்கள், மக்காவை விட்டு வெளியேறி விடும்படி கட்டளையிட்டார்கள். (புஹாரி முஸ்லிம்) இந்த ஹதீஸின் படி நபியவர்கள் ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை பள்ளிக்குச் செல்லுமாறு கட்டளையிட வில்லை. அவ்வாறு அது அனுமதிக்கப்பட்ட காரியமாக இருந்தால் அதனை நபியவர்கள் தெளிவுபடுத்தியிருப்பார் கள். எனினும், தவாஃப் அல் இஃபாழாவை அல்லது உம்ரா வுடைய தவாஃபை நிறைவேற்ற முன்னர் ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்பட்டால், அவள் சுத்தமான பின் அவை களை நிறைவேற்றுவாள்.

**ஐந்தாவது சட்டம் : பள்ளிவாயலில் தங்குதல்.** இதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸ் ஆதாரமாக உள்ளது. இந்த ஹதீஸில் மாதவிடாய் ஏற்பட்ட ஒரு பெண் பெருநாள் தொழுகை நடாத்தப்படும் இடத்தில் அமர்வதற்கு அனுமதிக் கப்படவில்லை. அந்த அடிப்படையில் பள்ளியில் தங்குவ தும் கூடாது. உம்மு அத்திய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், தான் நபியவர்களிடம் கேட்டதாக கூறுகிறார்கள். 'மணமாகாத இளம் கன்னிகளும், நன்கு வளர்ந்த பெண் பிள் ளைகளும் மாதவிடாய் உண்டான பெண்களும் பெருநாள் தொழுகை நடக்கும் திடலுக்கு செல்லவேண்டும் என்ற அந்த ஹதீஸில் மாதவிடாய் ஏற்பட்ட பெண்கள் தொழுகை நடக் கும் இடத்தைவிட்டு ஒதுங்கி இருப்பார்கள் என்று வந்துள் ளது. (புஹாரி முஸ்லிம்)

**ஆறாவது சட்டம் : உடலுறவு கொள்ளல் :** ஒரு கணவர் மாதவிடாய் ஏற்பட்ட தனது மனைவியுடன் உடலுறவு கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன், அதற் கான சந்தர்ப்பத்தை அவள் ஏற்படுத்திக் கொடுப்பதும் தடுக் கப்பட்டுள்ளது. இதற்கான ஆதாரமாக பின்வரும் அல்லாஹ் வின் கூற்று அமைந்துள்ளது. அல்லாஹுதஆலா கூறுகி றான்: *'இன்னும் மாதவிடாய் பற்றியும் உம்மிடம் கேட்கின் றனர்;. நீர் கூறும்: 'அது ஒரு தூய்மையற்ற (அசௌகரிய மான) நிலையாகும். ஆகவே மாதவிடாய்க் காலத்தில் பெண்களுடன் உடலுறவு கொள்வதை விட்டும் விலகி இருங்கள்; மேலும், அவர்கள் தூய்மையடையும்; வரை (உட லுறவுக்காக) அவர்களை அணுகாதீர்கள்.'* (அல்பகரா : 222)

இங்கு குறிப்பிடப்பட்ட மஹீழ் என்ற வார்த்தை மாதவிடாய் காலத்தையும் அது வருமிடத்தையும் அதாவது யோனியை யும் குறிக்கிறது. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இது குறித்து இவ்வாறு கூறுகிறார்கள்: 'உடலுறவு கொள்வதைத் தவிர மற்ற அனைத்தையும் செய் யுங்கள்'. (முஸ்லிம்) மாதவிடாய் ஏற்பட்ட பெண்ணுடன் உடலுறவு கொள்வது தடை என்பதில் எல்லா மார்க்க அறி ஞர்களும் ஏகோபித்த கருத்தில் உள்ளனர். அல்லாஹ் மற் றும் அவனின் தூதரினாலும்; அறிஞர்களின் ஏகோபித்த முடி வாலும் தடுக்கப்பட்ட இச்செயலை அல்லாஹ்வையும் மறுமை நாளையும் உறுதியாக நம்பும் எவரும் செய்யத் துணிவது ஹராமாகும். எவர் இக்காரியத்தில் ஈடுபடுகின் றாரோ அவர் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் அடி

பணியாது, விசுவாசிகளின் பாதையல்லாது ஏனைய வழி தவறியோரின் பாதையில் செல்வோராவார். இமாம் நவவி யின் அல்மஜ்மூஃ ஷர்ஹுல் முஹத்தப் என்ற நூலின் பாகம் 2 பக்கம் 374 ல் இமாம் ஷாபிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியதாக பின்வருமாறு இடம்பெற்றுள்ளது

'யாரேனும் இத்தகைய செயலில் ஈடுபட்டால் அவர் பெரும் பாவமொன்றை செய்தவர் ஆவார்.' என்று அவர் கூறு கிறார். அதே மத்ஹபைச் சேர்ந்த ஏனைய அறிஞர்களும் 'யாரேனும் ஒருவர் மாதவிடாய் ஏற்பட்ட ஒரு பெண்ணுடன் உடலுறவு கொள்வது அனுமதிக்கப்பட்டது எனக் கருதுவா ராயின் அவர் குப்ரில் (இறை நிராகரிப்பில்) வீழ்ந்துவிட்ட வராக தீர்ப்பளிக்கப்பட வேண்டும். என்று கூறுகிறார்கள். (இமாம் நவவியின் கூற்று முற்றும்)

ஒருவரின் பாலியல் ஆசையை கட்டுப்படுத்துவதற்காக மாத விடாய் ஏற்பட்ட தனது மனைவியின் தடுக்கப்பட்ட பகுதி களைத் தவிர்த்து அவளை முத்தமிடவும். கட்டித் தழுவவும், அணைத்துக் கொள்ளவும் அனுமதியுண்டு. ஆனால், ஒரு முக்கியமான விடயத்தை மறந்து விடக் கூடாது. அதாவது, மனைவியின் தொப்புழுக்கும் முழங்காலுக்கும் இடைப்பட்ட பகுதியை எதைக் கொண்டேனும் மறைக்காது நெருங்குவது கூடாது. ஏனெனில், ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள் : நபியவர்கள், நான் மாதவிடாய் ஏற்பட்ட நிலையில் இருக்கும் போது எனது இடுப்பில் ஆடையை கட்டிக் கொள்ளுமாறு கட்டளையிட்டு, அதன்

பின் என்னை அணைத்துக் கொள்வார்கள். (புஹாரி முஸ்லிம்)

**ஏழாவது சட்டம் : அத்தலாக் (விவாகரத்து).** ஒருவர் தனது மனைவியை மாதவிடாய் ஏற்பட்டிருக்கும் வேளையில் விவாகரத்து செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அல்லாஹுதஆலா கூறுகிறான்: *நபியே! நீங்கள் பெண் களை விவாகரத்து செய்தால் அவர்களின் இத்தாவை கணக் கிடக்கூடிய (மாதவிடாய் இல்லாத) காலத்தில் விவாகரத்து செய்யுங்கள்'* (அத்தலாக்: 1) இதன் கருத்து என்னவெனில், பெண்கள் விவாகரத்துச் செய்யப்படும் கட்டத்தில் அவர்கள் இத்தாவை நிரணயிக்கக் கூடிய நிலைமை இருக்க வேண் டும் என்பதாகும்.

அதாவது அவளை ஒருவர் விவாகரத்து செய்யும் போது கருவுற்ற நிலையில் அல்லது உடலுறவு இன்றி சுத்த மடைந்த நிலையில் இருக்க வேண்டும். அப்போதுதான் விவாகரத்தாக கருதப்படும். ஒரு பெண் மாதவிடாயில் இருக் கும் பொழுது விவாகரத்து செய்யப்பட்டால், அதனை குறிப் பிட்ட இத்தா காலத்தின் ஒரு பகுதியாகக் கொள்ள முடி யாது. காரணம் அவள் விவாகரத்து செய்யப்பட்ட மாத விடாய் நிலையை வைத்து இத்தா காலமாக கணிப்பது இயலாது.

உடலுறவின் பின் அவள் தூய்மையாக இருக்கும் நிலையில் விவாகரத்து செய்யப்பட்டால் குறிப்பிட்ட உடலுறவின் மூலம் கருவுற்றாளா இல்லையா என்பதிலும் அவ்வாறு

அவள் கருவுரவில்லையாயின் மாதவிடாயின் மூலம் கணிப் பதா என்பதில் உறுதியற்ற நிலை காணப்படும். எனவே, அவளது இத்தா எந்த வகையானது என்ற உறுதியற்ற நிலை யில் அவள் (சுத்தமானவளா அல்லது கர்ப்பிணியா என்று) தெளிவாகும் வரையில் அவளை அவளது கணவன் விவா கரத்து செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. ஆக, மேற்படி அல்குர்ஆன் வசனத்தின் அடிப்படையில் மாதவிடாயின் போது விவாகரத்து செய்வது (ஹராம்) தடைசெய்யப் பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹுஅன்ஹுமா அவர்கள் கூறியதாவது : நான் அல்லாஹ்வின் தூதர் ஸல் லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது காலத்தில் என் மனைவியை (மாதவிடாய் காலத்தில்) மணவிலக்குச் செய்து விட்டேன். இதனை, (என் தந்தை) உமர் பின் அல்கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு அறிவித் தார்கள். அப்போது அவர்கள் என் தந்தையிடம், 'உங்கள் புதல்வருக்குக் கட்டளையிடுங்கள்; அவர் தம் மனைவியைத் திரும்ப அழைத்துக் கொள்ளட்டும்! பிறகு அவள் மாதவிடா யிலிருந்து தூய்மையடைந்து, அடுத்து மீண்டும் அவளுக்கு மாதவிடாய் ஏற்பட்டுப் பின்னர் அதிலிருந்து அவள் தூய் மையடையும்வரை அவளை (தம்மிடமே) விட்டுவைக்கட் டும். பிறகு அவர் விரும்பினால், (இரண்டாவது மாதவிடாயி லிருந்து தூய்மையான) பின்னர் தம்மிடமே (தம் மனைவி யாக) வைத்திருக்கட்டும். அவர் விரும்பினால் அவளுடன்

தாம்பத்திய உறவு கொள்வதற்கு முன்பாக அவளை மண விலக்குச் செய்யட்டும். (மாதவிடாயிலிருந்து தூய்மையான) இந்தக் காலகட்டமே மனைவியரை மணவிலக்குச் செய்ய அல்லாஹ் (2:228ஆவது வசனத்தில்) அனுமதித்துள்ள ('இத்தா' எனும் காத்திருப்புக் காலத்தைக் கணக்கிட்டுக் கொள்வதற்கு ஏற்ற) கால கட்டமாகும்' என்று சொன்னார் கள்.

எனவே, தனது மனைவி மாதவிடாய் ஏற்பட்டுள்ள வேளை யில் அவளை விவாகரத்து செய்பவன் பாவியாவான். அதற் காக அவன் பச்சாதாபப்பட்டு அல்லாஹ்விடம் பாவமீட்சி கோருவதுடன் அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் கட்டளைக்கிணங்க மார்க்க சட்டத்தின் பிரகாரம் விவா கரத்து செய்வதற்காக அவளை தன்னிடம் திருப்பி அழைத்து கொண்டு அவளின் மாதவிடாய் முடிந்து அவள் சுத்தமாகும் வரை தன்னுடன் வைத்திருப்பதுடன் அடுத்த மாதவிடாய் ஏற்படும் வரை காத்திருக்க வேண்டும். பின்பு, அவள் சுத்த மானதும் அவளை தன்னுடன் வைத்திருக்கவும் முடியும் அல் லது அவளுடன் உடலுறவு கொள்வதற்கு முன், விவாகரத் துச் செய்யவும் முடியும். மாதவிடாயின் போது ஒரு பெண்ணை விவாகரத்துச் செய்வது தடுக்கப்பட்டதாகும்.

ஆனால் பின்வரும் மூன்று நிலைகளில் அனுமதிக்கப்படும். முதலாவது நிலை: அவளுடன் தனிமையில் இருப்பதற்கு முன்போ அல்லது அவளுடன் பாலியல் தொடர்பு கொள்ள முன்னோ, அவளை மாதவிடாய் காலத்தில் விவாகரத்து செய்வதில் தவறில்லை. இத்தகைய கட்டத்தில் அவளுக்கு

இத்தா என்பது இல்லை என்பதுடன் அவளது விவாகரத்து அல்லாஹ்வின் கட்டளைக்கு முரனானதுமில்லை. இதற் கான ஆதாராமாக பின்வரும் அல்லாஹ்வின் கூற்று அமைந் துள்ளது. *அந்தப் பெண்களின் இத்தாவைக் கணக்கிடக் கூடிய மாதவிடாய் இல்லாத காலத்தில் விவாகரத்து செய்யுங்கள்.* (அத்தலாக்: 1)

இரண்டாவது நிலை: ஒரு பெண் கருத்தரித்து இருக்கும் போது மாதவிடாய் ஏற்பட்டிருக்கும் நிலையில் விவாகரத்து செய்தால் அதுவும் அனுமதிக்கத்தக்கதாகும். இது தொடர் பான விபரமும் காரணமும் ஏற்கனவே குறிப்பிடப்பட்டு விட்டது.

மூன்றாவது நிலை: கணவன் ஏதாவது இழப்பீட்டை பெற் றுக் கொண்டு மாதவிடாய் காலத்தில் அவளை விவாகரத்து செய்வது. அதுவும் குற்றமில்லை.

உதாரணமாக கணவன் மனைவிக்கிடையே தொடரான பெரும் தகராறும் பிரச்சினைகளும், மோசமாக நடந்து கொள்ளுதல் போன்றன இருக்குமாயின் அந்தக் கணவன் தனது மனைவியிடமிருந்து பணமோ அல்லது வேறு பொருட்களோ பெற்றுக்கொண்டு மாதவிடாய் இருக்கும் நிலையில் அவளை விவாகரத்து செய்வது அனுமதிக்கப் பட்டுள்ளது. இதற்கு பின்வரும் ஹதீஸ் சான்றாக அமை கிறது. இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'ஸாபித் இப்னு கைஸ் இப்னி ஷம்மாஸ் அவர்களது மனைவி நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்

களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே! நான், ஸாபித்தின் குணத்திலோ அவரது மார்க்கத்திலோ குறை கூறவில்லை ஆனால், நான் ஒரு முஸ்லிமாக இருந்து கொண்டு, (அவருடன் தொடர்ந்து வாழ்வதால்) இஸ்லாத்தின் நெறிமுறைகளுக்கு முரணாக நடந்து கொள்ள நான் விரும்பவில்லை.' என்றார்கள்.

அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், 'உமக்கு உமது கணவன் (மஹராக) மணக்கொடையாகத் தந்த தோட்டத்தை அவருக்குக் திருப்பிக் கொடுப்பீரா?' எனக் கேட்டார்கள். அவர் 'ஆம்!' என்றார். பின்னர் நபி (ஸல்) அவர்கள் ஸாபிதைப் பார்த்து; 'ஸாபிதே | உங்கள் தோட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவளை முழுமையாக விவாகரத்து செய்யுங்கள். என்றார்கள். (புஹாரி)

இந்த ஹதீஸில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், 'அவள் மாதவிடாய் உண்டாகி இருக்கிறாளா இல்லையா' எனக் கேட்காதது கவனிக்கத்தக்க விடயமாகும். ஏனெனில் இவ்வாறான தலாக் ஒரு பெண்ணே தான் முன்வந்து செய்யும் தலாகாகும். எந்நிலையில் அது இருப்பினும் ஆகுமானதாகும். இந்நிகழ்வை ஆதாரமாகக்; கொண்டு ஒரு பெண் அவள் மாதவிடாய் நிலையில் இருக்கும் போது கணவனிடம் விவாகரத்து (குல்உ) கோருவதற்கு அனுமதியுள்ளது என இமாம் இப்னு குதாமா அல் மக்திஸி அவர்கள் தனது முஃக்னி என்ற நூலில் குறிப்பிடுகிறார். (பக்கம் 52 பாகம் 7)

இங்கு கருத்திற் கொள்ள வேண்டிய விடயம் என்னவென் றால் மாதவிடாய்க் காலத்தில் பெண்களை விவாகரத்து செய்ய தடுத்திருப்பதற்கான காரணம் அவர்களது இத்தாக் காலம் நீடித்து அவர்களுக்குத் தீங்கு ஏற்பட முடியும் என்பதினாலாகும்; ஆனால் (குல்ஐ) பெண்தரப்பால் பிரி வதை பொருத்தமட்டில் அது மோசமான முறையில் நடந்து கொள்ளுதல், அசௌகரியம், பகை போன்ற தீங்குகளை நீக்குவதை அடிப்படையாகக் கொண்டது. அதனால்; மாதவிடாயின் போது விவாகரத்து செய்வதின் தீங்கை விட இது ஆபத்து நிறைந்தது. இந்த அடிப்படையில் ஆபத்து கூடிய நிலையான பெண்ணின் தரப்பால் விவாவரத்து பெறுதல் என்பதற்கு முன்னுரிமை அளிப்பது கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் ஸாபித் இப்னு கைஸின் மனைவியிடம் அவளது மாத விடாய் நிலைமைப் பற்றிக் கேட்கவில்லை. (இப்னு குதாமா ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கூற்று முற்றும்)

"அடிப்படையில் அனைத்து விடயங்களும் அனுமதிக்கப் பட்டதாகும்" என்ற விதியின் படி ஒரு பெண்ணுக்கு மாத விடாய் ஏற்பட்டிருக்கும் நிலையில் அவளுக்கு திருமண ஒப்பந்தம் செய்வது அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனைத் தடுக்கக்கூடிய ஆதாரம் எதுவும் கிடையாது. ஆயினும், குறிப்பிட்ட கணவன் தனது உடலியல் ஆசையை கட்டுப் படுத்திக் கொண்டு எச்சரிக்கையாய் இருக்க முடியும் என் றால் அக்காலப்பகுதியில் சேர்ந்து இருக்கலாம். ஆனால் அவரால் தனது உடலியல் ஆசையை கட்டுப்படுத்திக்

கொள்ள முடியாதெனக் கண்டால், மாதவிடாயிலிருந்து சுத்தமாகும் வரை அவளுடன் தனித்திருக்கக் கூடாது.

**எட்டாவது சட்டம் : விவாகரத்தின் இத்தா காலத்தை மாத விடாயைக் கொண்டு கணித்தல்.** ஒருவர் தனது மனைவி யுடன் உடலுறவு கொண்ட பின்னரோ, அல்லது, அவளு டன் தனிமையில் இருந்த பின்னரோ, அவளை விவாகரத்து செய்தால், அவள் இத்தாவாக மூன்று மாதவிடாய்களை முழு மையாகப் பூர்த்தி செய்ய வேண்டும். கர்ப்பினி அல்லாத மாதவிடாய் ஏற்படும் பெண்களுக்கே இந்த சட்டமாகும். இதனை அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான்: '*விவா கரத்து செய்யப்பட்ட பெண்கள் மூன்று மாதவிடாய் காலம் தங்களுக்காக எதிர்பார்த்திருக்க வேண்டும்*' (அல் பகரா: 228)

வசனத்தில் இடம் பெற்ற ‘‘குரூஉ‘‘ என்பது மூன்று மாத விடாய் காலம் என்பதைக் குறிக்கும். விவாகரத்திற்குள் ளான பெண், கருத்தரித்திருந்தால் அவளுடைய இத்தா பிரசவம் வரையிலாகும். குறிப்பிட்ட இத்தாக் காலம் அவளுக்கு குறைவானதாக இருந்தாலும் நீண்டதாக இருந் தாலும் சரியே! இதனை அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான்: '*இன்னும் கர்ப்பிணிகளுக்குரிய இத்தாக் கால எல்லை அவர்கள் குழந்தை பெற்றெடுக்கும் வரையிலா கும்.*' (அத்தலாக்: 4)

சிலவேளை, குறிப்பிட்ட பெண் பருவமடையாத மாத விடாய் ஏற்படாத (சிறு பிள்ளை போன்று) இருந்தால், அல்லது மாதவிடாய் ஏற்படும் வயதெல்லையைக் கடந்து

விட்டவளாக இருந்தால், அல்லது அறுவை சிகிச்சையின் மூலம் அவளது கருப்பை அகற்றப்பட்டவளாக இருந்தால் அல்லது இதையொத்த நிலைகளில் இருந்தால் அவளுடைய இத்தா சரியாக மூன்று மாதங்களாகும். இதனை அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் : "*உங்கள் பெண்களில் எவர் கள் மாதவிடாயைவிட்டும் நம்பிக்கையிழந்து (அவர்களின் இத்தாவிடயத்தில்) நீங்கள் சந்தேகம் கொண்டால் அவர் களுக்கும் இதுவரை மாதவிடாய் ஏற்படாதவர்களுக்குரிய இத்தாக் காலமும் மூன்று மாதங்களாகும்*" (அத்தலாக்: 4)

சிலபோது, மாதவிடாய் ஏற்படும் ஒரு பெண்; நோய், குழந்தைக்குப் பாலூட்டுதல் போன்ற சில காரணங்களால் மாதவிடாய் நின்று விட்டதை உணர்கிறாள்;. அவள் தனது மாதவிடாய் மீண்டும் வரும் வரை அது மிக நீண்ட கால மாயினும் இத்தா இருப்பதோடு, அதன் மூலம் தனது இத்தா காலத்தை கணக்கிட்டுக் கொள்வாள். குறிப்பிட்ட கார ணங்கள் நீங்கியதன் பின்னரும் (அதாவது, அவளுடைய நோய் குணமாகிறது அல்லது பாலூட்டலிலிருந்து முடி வடைகிறாள்) மாதவிடாய் ஏற்படவில்லையாயின், அப் பொழுது அக்காரணங்கள் நீங்கிய காலத்திலிருந்து ஒரு வருடம் பூர்த்தியாக இத்தாக் காலத்தைக் கணித்தல் வேண் டும். இதுதான் இஸ்லாமிய சட்டவிதிகளுக்குப் பொருந்தும் மிகச் சரியான கருத்தாகும்.

குறிப்பிட்ட காரணங்கள் நீங்கி மாதவிடாய் ஏற்படவில்லை யாயின் அவளது நிலை, அறியப்படாத எதுவிதக் காரணங் கள் இல்லாது மாதவிடாய் நின்றுவிட்ட பெண்களின்

நிலைக்கு ஒப்பானதாகும். அவ்வாறு இருந்தால் பேணுத லின் அடிப்படையில் அவளது இத்தாக் காலம் ஒரு வருட மாகும். பொதுவாக பிள்ளைப் பிரசவக் காலமாக ஒன்பது மாதமும் இத்தாவுடைய காலம் மூன்று மாதமுமாக சேர்த்து ஒரு வருடமாக கணிக்கப்படும். ஒரு பெண்ணுக்கு விவாக ஒப்பந்தம் நடைபெற்று தனது கணவனுடன் அவள் தனித் திருப்பதற்கும் உடலுறவு கொள்ளவதற்கு முன் விவாகரத்து நிகழுமாயின், அப்பொழுது எத்தகைய இத்தாவும் அவள் அனுஷ்டிக்க வேண்டியதில்லை.

இதனை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகிறான்: *விசுவாசங் கொண்டோரே! நீங்கள் விசுவாசங் கொண்ட பெண்களைத் திருமணம் செய்து, பிறகு அவர்களை நீங்கள் தீண்டுவதற்கு முன் தலாக் கூறி விட்டால், (மற்ற விவாகரத்து செய்யப் பட்ட பெண்களுக்காக) நீங்கள் எதைக் கணக்கிடுவீர்களோ அத்தகைய எந்த "இத்தா"வும் அவர்களின் மீது (நிர்ணயிக்க) உங்களுக்கு (உரிமை) இல்லை.* (அல் அஹ்ஸாப் : 49)

**ஒன்பதாவது சட்டம் : ஒரு பெண் கருவை சுமக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தி தீர்ப்பு வழங்குதல்.** இந்தத் தலைப் பில் பல விடயங்கள் காணப்படுகின்றன. அவை மாத விடாயுடன் தொடர்புபடுகிறது. அதன் விவரம் பின்வரு மாறு:

ஒருவர் தனது மனைவி கருவுற்ற நிலையில் மரணித்து விடு கிறான் என்றால் அந்த கருப்பையில் உள்ள சிசு அவனின் வாரிசாக கருதப்படுகின்றான். குறிப்பிட்ட அவளின் கண

வர், மாதவிடாய் ஏற்படும் வரையில் அல்லது அவள் கரு வுற்றிருப்பது தெளிவாகத் தெரியும் வரையில் அவளுடன் உடலுறவு கொள்ளாதிருந்தால் பின்வரும் நிலைப்பாடுகள் காணப்படுகின்றன : அ: அந்தப்பெண் கருவுற்றது தெளி வாகத் தெரிந்தால் அந்த அனந்தரச் சொத்துக்குரியவனாக கருப்பையில் உள்ள சிசு கருதப்படும். காரணம் சொத்துக்குச் சொந்தக்காரரான தந்தை மரணிக்கும் வேளை அச்சிசு இருக் கிறது. ஆ: குறித்த பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்பட்டிருந் தால் அச்சிசு அனந்தரச் சொத்தை பெற்றுக் கொள்ளாது என்று தீர்ப்பளிக்கப்படும். காரணம், மாதவிடாயின் மூலம் அப்பெண் கருவுறவில்லை என்பது தெளிவாகிவிட்டது.

**பத்தாவது : குளித்தல்.** மாதவிடாயிலிருந்து தூய்மைய டைந்த பெண் முழு உடலையும் சுத்தப்படுத்தி குளிப்பது கட மையாகும். இதனை பின்வரும் ஹதீதில் பார்க்க முடியும். நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அபூ ஹுபைஷின் மகள் ஃபாத்திமாவுக்கு இவ்வாறு கூறினார் கள்: 'உங்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டால் தொழுகையை விட்டுவிடுங்கள், அது நின்று விட்டால் குளித்து சுத்தமாகி தொழுது கொள்ளுங்கள் ' என்றார்கள். (புஹாரி)

குளிப்பைப் பொறுத்த வரையிலான குறைந்தபட்ச கடமை என்னவெனில் தலையின் மேற்பகுதி உட்பட உடலின் எல்லாப் பகுதிகளையும் நன்கு கழுவி விடுவதாகும். எனி னும் ஹதீதில் கூறப்பட்ட முறைப்படி குழிப்பது மிகச் சிறந்ததாகும். அஸ்மா பின்த் ஷக்ல் ரழியல்லாஹு அன்ஹா மாதவிடாய் ஏற்பட்ட பெண் சுத்தமாவதற்கான கட்டாயக்

குளிப்பு சம்பந்தமாக நபியவர்களிடம் கேட்ட போது, நபி யவர்கள் : "உங்களில் ஒவ்வொருவரும் ஸித்ர் மரத்தின் (இலைகள் கலந்த) நீரைப் பயன்படுத்தி நன்றாக சுத்தம் செய்து கொள்ள வேண்டும். பின்னர் அவள் தனது தலை யில் நீரை ஊற்றி தலையின் மேற்பரப்பை சென்றடையும் வரை நன்றாக தேய்க்க வேண்டும். பின்னர் அவள் தனது தலையில் (நீரை) ஊற்றிக்கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு கஸ்தூரி கலந்த பருத்தித் துன்டொன்றை எடுத்து அதன் மீது சுத்தம் செய்து கொள்ள வேண்டும்" என்று கூறினார்கள்.

அப்போது 'அதைக் கொண்டு எவ்வாறு சுத்தம் செய்வது? என்று மீளவும் அப்பெண் வினவ, நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் ஆச்சரியத்துடன் "சுப்ஹா னல்லாஹ்" என்று அல்லாஹ்வை துதித்தார்கள். அப்போது ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள், இரத்த அடை யாளங்கள் நீங்கும் வரை சுத்தம் செய்து கொள்ளுங்கள் என்று அப்பெண்ணுக்குப் பதிலளித்தார்கள்' (ஸஹீஹ் முஸ்லிம்) மாதவிடாய் உண்டான பெண் தனது தலை முடியின் அடிப்பாகம் வரை நீர் செல்வதை தடுக்கும் வகை யில் முடியை நெருக்கமாக பின்னிடாத வரையில் அதனை அவிழ்த்து விடுவது கடமையில்லை.

உம்மு ஸலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் "நான் தலை முடியை பின்னிய நிலையில் இருக்கும் ஒரு பெண், கட மையான குளிப்பை நிறைவேற்றும் போது) அல்லது (மாத

விடாயிலிருந்து தூய்மையடைவதற்காக) குளிப்பதற்கு பின்னிவிடப்பட்ட முடியை அவிழ்த்து விட வேண்டுமா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், இல்லை நீங்கள் 'மூன்று முறை கை நிறைய நீரை எடுத்து உங்கள் தலையில் ஊற்றிக் கொண்டால் போதுமானது. பின்னர் உங்கள் உடல் மீது நீரை ஊற்றுங்கள். இவ்வாறு நீங்கள் செய்வதன் மூலம் சுத்தம் அடைவீர்கள்' என்று பதிலளித்தார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

மாதவிடாய் உண்டான ஒரு பெண் குறிப்பிட்டதொரு தொழுகைக்குரிய வேளையில் சுத்தமடைவாளாயின், அத் தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்றுவதற்காக உடனே குளிக்க வேண்டும். என்றாலும், அவள் பிரயாணத் தில் இருக்கின்றாள்; நீர் கிடைக்கவில்லை, அல்லது நீரி ருந்தும் அதைப் பயன்படுத்தினால் அவளுக்குத் தீங்கு (நோய் அல்லது வேரேதும்) ஏற்படும் என்ற அச்சம் இருக்கு மாயின், அவள் தயம்மும் செய்யலாம். அவள் நீரைப் பயன் படுத்தத் தடையாயுள்ள நிலை நீங்கும் வரை அப்படிச் செய் யலாம். பின்னர் அவள் குளிக்க வேண்டும்.

குறித்ததொரு தொழுகை நேரத்தின் போது சுத்தமாகிவிடும் சில பெண்கள் உள்ளனர்; அவர்கள் குளிப்பதைப் பிற் படுத்திவிட்டு; 'குறித்த தொழுகைக்குரிய காலத்தினுள் தம்மை சுத்தப்படுத்திக் கொள்வது சாத்தியமில்லை' என்று நியாயம் கூறுவர். இது ஏற்றுக் கொள்ளமுடியாத கட மையை தட்டிக் கழிக்கும் கூற்றாகும். ஏனெனில், அவர் களுக்கு குளிப்பில் குறைந்த கடமையை நிறைவேற்றி குளித்துவிட்டு, குறித்த தொழுகையை உரிய நேரத்தில் தொழ முடியும். பின்னர் அவர்களுக்கு வாய்ப்பு கிட்டும் போது முழுமையாக குளித்து சுத்தமாக முடியும்.

# ஐந்தாவது பகுதி:

# (இஸ்திஹாழா) தொடர் உதிரப்போக்கும் அது தொடர்பான சட்டங்களும்

இஸ்திஹாழா என்பது ஒரு பெண்ணின் பெண்ணுறுப்பிலி ருந்து தொடர்ச்சியாக அல்லது மிகக் குறைந்த காலத்திற்கு (மாதாந்தம் இரண்டொரு நாட்களுக்கு) நின்று மீண்டும் வெளிவரும் இரத்தத்தைக் குறிக்கும். (குறிப்பு : மாதவிடாய் இரத்தமானது கர்ப்பப்பையின் ஆழத்திலிருந்து வெளியா கும். (மட்டுமீறிய இரத்தப்போக்கு) தொடர் உதிரப்போக்கு கர்ப்பையின் வாய்ப் பகுதியிலிருந்து கசியும் இரத்தமாகும்)

1- வரைவிலக்கணத்தில் குறிப்பிடப்பட்ட முதலாவது பகுதி யான தொடராக வெளிவரும் இரத்தம் என்பதற்கான ஆதா ரம் ஸஹீஹுல் புஹாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனை ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறி விக்கிறார்கள்: 'பாத்திமா பின்த் அபீ ஹுபைஷ் அவர்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களிடம், 'நான் மாதவிடாயிலிருந்து துய்மையடைவதில்லை அதா வது (இரத்தம் வெளிவருவது நிற்பதில்லை)' என்றும், மற் றோர் அறிவிப்பில், "எனக்கு (மாதவிடாய் காலங்களுக்

கிடையில்) நிற்காது இரத்தம் வெளிவருகின்றது அதனால் நான் சுத்தமாகுவதில்லை!' என்றும் கூறினார்கள்.

2- வரைவிலக்கணத்தில் குறிப்பிடப்பட்ட இரண்டாவது பகுதியான மிகக் குறைந்த காலத்திற்கு நின்று வெளிவரும் தொடர்ந்து வரும் இரத்தத்திற்கான ஆதாரம். நபி (ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களிடம் வந்த ஹம்னா பின்த் ஜஹ்ஷ் அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! எனது மாதவிடாய் அளவில் கூடியதும் தாங்க முடியாததுமாகும்!' எனக் கூறினார். (இந்த ஹதீஸை இமாம்களான அஹ்மத், அபூதாவூத், திர்மிதி போன்றோர் அறிவித்துள்ளனர். இமாம் திர்மிதி இந்த ஹதீஸ் ஸஹீஹ் எனக் குறிப்பிட்டுள்ளதோடு இமாம் அஹ்மத் இதனை ஸஹீஹ் எனக் குறிப்பிட்டதாக வும் இமாம் புஹாரி ஹஸன் எனக்குறிப்பிட்டதாகவும் இமாம் திர்மிதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.)

**இஸ்திஹாழா (தொடர் உதிரப்போக்கு) வின் நிலைகள் :**

இஸ்திஹாழா ஏற்படும் பெண்களின் நிலைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்:

முதாலவது : ஒரு பெண்ணைப் பொறுத்த வரையில் தொடர் உதிரப்போக்கு ஏற்பட முன்னர், வழக்கமான மாதவிடாய் காலம் அவளுக்கு அறியப்பட்டதாக இருக்கும். இக் குறித்த மாதவிடாய்க் காலத்திலன்றி மற்றைய காலத்தில் வெளி வரும் இரத்தம் 'இஸ்திஹாழா என கணிக்கப்பட்டு அதற் குரிய சட்டங்கள் பின்பற்றப்பட வேண்டும்.

உதாரணமாக: ஒரு பெண்ணிற்கு ஒவ்வொரு மாதத்திலும் முதல் ஆறு நாட்களுக்கு சாதாரணமான நிலையில் மாத விடாய் ஏற்படும்; பின்னர் திடீரென அவளுக்கு இரத்த வெளியேற்றம் நிற்காமல் வெளியேரும். இப் பெண்ணைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாதமும் ஆறு நாட்கள் வெளியேறும் இரத்தமே மாதவிடாய் இரத்தமாகவும்; அதைத் தொடர்ந்து வெளியேறும் இரத்தம் இஸ்திஹாழா இரத்தமாகவும் கருதப்படும். இதற்கான ஆதாரம் ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் பின்வரும் ஹதீதாகும்.

பாத்திமா பின்த் அபீ ஹுபைஷ் என்ற பெண் நபி ஸல் லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! நான் (இரத்தப் போக்கிலிருந்து) சுத்தமாவதே இல்லை. எனவே நான் தொழுகையை விட்டு விடலாமா?' என்று கேட்டதற்கு, அவ்வாறு செய்ய வேண் டாம்' அது இரத்த நாலத்திலிருந்து ஏற்படும் ஒரு உபாதை யாகும். (அது மாதவிடாயன்று) உமக்கு வழமையாக மாத விடாய் இருந்து வந்த நாட்களின் அளவுக்கு தொழுகையை விட்டுவிடுவீராக பின்னர் குளித்துவிட்டு தொழுவீராக' என்று இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள். (புஹாரி)

ஸஹீஹ் முஸ்லிமில் பதிவு செய்யப்பட்ட ஹதீஸில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உம்மு ஹபீபா பின்த் ஜஹ்ஷ் அவர்களுக்கு: "உமக்கு ஏற்கனவே மாதவிடாய் ஏற்பட்ட கால அளவு வரை இருந்து விட்டு, பின் குளித்து விட்டு தொழுவீராக" என்று கூறினார்கள்.

இந்த ஹதீஸின் படி வழமையாக அறியப்பட்ட மாதவிடாய் கால அளவிற்கு இருந்துவிட்டு, பின்பு குளித்து தொழுது கொள்வாள். அந்நேரம் வரும் இரத்தம் தொடர்பாக பொருட் படுத்தத் தேவையில்லை.

இரண்டாவது நிலை : தொடர் உதிரப் போக்கு ஏற்பட முன் மாதவிலக்கு நாட்கள் பற்றிய தெளிவான கால வரையொன் றில்லாத ஒரு பெண், அதாவது பருவமடைந்த முதல் மாதத்தில் இருந்தே ஹைழுடைய இரத்தத்துடன் சேர்ந்தே வெளியாகிக் கொண்டிருக்கும். இரத்தத்தின் நிறம் வாடை, அடர்த்தி போன்றவற்றை வைத்து அது மாதவிடாய் இரத் தமா? அல்லது இஸ்திஹாழா (தொடர் உதிரப்போக்கு) இரத்தமா என்பதை வித்தியாசப்படுத்திக் கொள்ள முடியும். வெளிப்படும் இரத்தத்தில் கருமை, அடர்த்தி, வாடை போன் றன அவதானிக்கப்பட்டால் குறித்த பெண் மாதவிடாய் சட் டங்களைப் பின்பற்ற வேண்டும். இரத்தத்தின் நிறம் மாறி அடர்த்தி, வாடை குறைந்துவிட்டால் அவள் இஸ்திஹாழா வின் சட்டத்தைப் பின்பற்ற வேண்டும். அதாவது அவளுக்கு அனைத்து வணக்க வழிபாடுகளையும் செய்ய அனுமதியுள் ளது.

உதாரணமாக, ஒரு பெண் அவள் ஆரம்பமாக மாதவிலக் கினை காண்கிறாள், பின் அது தொடர்கிறது. முதல் பத்து நாட்களில் கருப்பு நிறமாகவும், மாதத்தின் எஞ்சிய நாட் களில் சிவப்பு நிறத்திலும் அல்லது முதல் பத்து நாட்களில் அடர்த்தியாகவும் எஞ்சிய நாட்களில் மென்மையானதாக வும் அல்லது பத்து நாட்கள் துர் நாற்றத்துடனும் எஞ்சிய

நாட்கள் நாற்றமில்லாமலும் காண்கிறாள் என்று வைத்துக் கொள்வோம். அதனடிப்படையில் முதல் மற்றும் இரண் டாம், மூன்றாம் உதாரணங்களில் கூறப்பட்டது போல் இரத்தமானது கருப்பு அல்லது அடர்த்தி நிறைந்தது அல்லது துர்நாற்றமிக்கது என்றிருந்தால் இவையனைத்துக் கட்டங் களிலும் மாதவிடாயாகவே கருதப்படும். அதைத்தவிரவுள்ள நிலைகளில் இஸ்திஹாழாவாக கருதப்படும்.

இதற்கு நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பாதிமா பின்த் அபீஹுபைஷ் அவர்களுக்கு கூறியது ஆதார மாக உள்ளது. நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பாதிமா பின்த் அபீஹுபைஷ் அவர்களுக்கு 'மாத விடாய் இரத்தம் அறியப்பட்ட கருப்பு நிறத்திலானது. அவ் வாறு இருந்தால் தொழுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். அது தவிர வித்தியாசமான இன்னொரு நிலையில் காணப் பட்டால் வுழு செய்து தொழுது கொள்ளுங்கள். ஏனெனில், அது நரம்பு நோயாகும். (அபூதாவூத், நஸாஈ)

(இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானது என இப்னு ஹிப்பான் மற்றும் ஹாகிம் ஆகியோர் தீர்ப்பளித்துள்ளனர்) இந்த ஹதீஸ் அறிவிப்பாளர் தொடர் மற்றும் ஹதீஸ் வாசகம் தொடர்பில் பிரச்சினை இருப்பினும் இதனை அறிஞர்கள் ஆதாரமாகக் கொண்டுள்ளனர். பெரும்பாலான பெண்க ளின் வழமையை ஆதாரமாகக் கொள்வதை விட இந்த ஹதீஸை ஆதாரமாகக் கொள்வது மிகவும் பொருத்தமாகும்.

மூன்றாவது நிலை :– மாதவிடாய்க்கான வழமையை அறிய வில்லை, வித்தியாசத்தையும் தெரிந்து கொள்ளவில்லை. அதாவது அவள் இரத்தத்தை கண்டது முதல் ஒரே மாதிரி யாகவும் அல்லது மாதவிடாய் இரத்தமாக இருப்பதற்கு முடி யாதளவு பல்வேறுபட்ட நிறங்களில் காணும் நிலை. இவ்வா றான நிலையிலிருக்கும் பெண்கள் பொதுவாகப் பெண் களுக்கு ஏற்படும் மாதவிடாய் காலத்தைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். அந்த வகையில் ஒவ்வொரு மாதமும் ஆறு அல்லது ஏழு நாட்கள் மாதவிடாய் ஏற்படும் என்றிருந்தால் முதலில் காணும் இரத்தம் மாதவிடாய் ஆகும். அதன் பின்னர் ஏற்படுவது இஸ்திஹாழா தொடர் இரத்த போக்காகும்.

உதாரணமாக ஒரு பெண் மாதத்தின் ஐந்தாம் நாள் இரத்தம் வெளிவருவதை முதலாவதாகக் காண்கின்றாள். தொடர்ந்து வெளிவரும் அந்த இரத்தத்தின் நிறம், மணம், அடர்த்தி என்பவற்றைக் கொண்டு எந்த வித்தியாசத்தையும் விளங் கிக் கொள்ள முடியாது இருக்கின்றாள். அந்த நிலையில் அவளது மாதவிடாய் நாட்களை ஒவ்வொரு மாதமும் ஐந் தாம் தினத்திலிருந்து ஆறு அல்லது ஏழு நாட்கள் எனக் கணிக்க வேண்டும். இதற்கு பின்வரும் ஹம்னா பின் ஜஹ்ஷ் அவர்களின் ஹதீஸ் ஆதாரமாக உள்ளது. 'ஒரு முறை ஹம்னா பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை விளித்து, 'அல்லாஹ்வின் தூதரே! அதிகளவானதும், தாங்க முடியாததுமான

மாதவிடாய் எனக்கு ஏற்படுகிறது. அதனால், அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அது என்னை தொழுகை யிலிருந்தும் நோன்பு நோற்பதிலிருந்தும் தடுத்து நிறுத்தி யுள்ளது' என்றார்.

அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள். 'நீர் பருத்தித் துணியை பயன்படுத்துவது நல்லது என ஆலோசனை கூறுகிறேன். அதை உமது மறைவிடத்தில் வைக்கவும். அது இரத்தத்தை உறிஞ்சி எடுத்துக் கொள் ளும்.' என்றார்கள். அப்பொழுது, 'அதைவிட மிக அதிகமாக வருகின்றதே!' என்று கூறியதற்கு (இந்த ஹதீஸில்) இவ் வாறு பதிலளித்தார்கள்; 'உங்களை மார்க்க கடமையிலி ருந்து தூரப்படுத்துவதற்கான ஷைத்தானின் சூழ்ச்சிகளிள் ஒன்றாக இது உள்ளது.

எனவே, உங்கள் மாதவிடாயை ஆறு அல்லது ஏழு நாட்கள் எனக் கணியுங்கள். அது எதுவாக இருக்க வேண்டும் என் பதை மிக அறிந்தவன் அல்லாஹ் ஒருவனே, பின்னர் கழு விக் கொள்ளுங்கள்; நீங்கள் நன்கு சுத்தமாக இருப்பதாகக் கண்டால் இருப்பத்தி மூன்று (23) அல்லது இருபத்து நான்கு (24) நாட்கள் தொழுங்கள்; அத்துடன் நோன்பும் நோற்றுக் கொள்ளுங்கள். இதுவே உங்களுக்குப் போதுமானதாகும். என்றார்கள். (அஹ்மத், அபூதாவூத், திர்மிதி. இமாம் திர்மிதி அவர்கள் இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானது (ஸஹீஹானது) எனக்குறிப்பிட்டுள்ளார்). அதே போல் இமாம் அஹ்மத் அவர்கள் இந்த ஹதீஸ் ஸஹீஹ் தரத்திலானது என்றும் இமாம் புஹாரி இந்த ஹதீஸ் ஹஸன் தரத்திலானது என்

றும் குறிப்பிட்டதாகவும் அவர் (திர்மிதி) கூறியுள்ளார். நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் இங்கு 'ஆறு அல்லது ஏழு நாட்கள்' என குறிப்பிட்டது விரும்பிய எதை யேனும் தெரிந்தெடுத்துக் கொள்வதற்கல்ல. மாறாக, அது இஜ்திஹாத் அடிப்படையிலாகும். அதாவது ஒரு பெண் தனது வயது, உடல் அமைப்பு போன்ற விடயங்களில் தனக்கு நெருக்கமானவர்களை ஒப்பிட்டு பார்க்க வேண்டும். அவ்வாறு தன்னுடன் ஒத்துப்போகும் பெண்களுக்கு ஆறு நாட்கள்தான் மாதவிடாய் என்றால் அவள் தனக்கும் ஆறு நாட்கள் என எடுத்துக் கொள்வாள்; சிலவேளை அவர்க ளுக்கு ஏழு நாட்கள் என்றால் அவளும் ஏழு நாட்கள் என எடுத்துக் கொள்வாள்.

**தொடர் உதிரப்போக்கு ஏற்பட்ட பெண்களுக்கு ஒப்பானவர் களின் நிலை :**

சில வேளை பெண்ணுறுப்பிலிருந்து இரத்தம் தொடராக வெளிவருவதற்கு கருப்பை மற்றும் அதனை அண்டிய பகுதியில் சத்திர சிகிச்சை மேற்கொண்டது போன்ற ஏதே னும் காரணிகள் இருக்க முடியும். அவ்வாறு வெளிவரும் இரத்தம் இரண்டு வகைப்படும் :

1- சத்திர சிகிச்சையைத் தொடர்ந்து அவளுக்கு மாதவிடாய் ஏற்படுவது சாத்தியமில்லை என்ற நிலை. அதாவது இரத்தம் வெளியே வர முடியாத வகையில் கருப்பையை முழுமை யாக அகற்றிவிடல் அல்லது கருப்பையிலிருந்து வெளிவரும் வழியை அடைத்து விடுவிடல் போன்றவற்றை இதற்கு

உதாரணமாக குறிப்பிடலாம். இத்தகையவற்றிற்கு இஸ்தி ஹாழாஹ் தொடர்பான சட்டங்கள் கடைப்பிடிக்கத் தேவை யில்லை. சுத்தமாகியதின் பின் மஞ்சள் நிறத்திலான அல்லது கபில நிறத்திலான இரத்தம் அல்லது ஈரத்தன்மை போன் றவை வெளியேறும் போது கடைப்பிடிக்க வேண்டிய சட் டங்களையே இங்கு பின்பற்ற வேண்டும்.

எனவே, அவள் தொழுவது, நோன்பு நோற்பது போன்றவற் றிலிருந்து தன்னைத் தடுத்துக் கொள்ளக் கூடாது. அவற்றை உரிய முறையில் செய்துவர வேண்டும். மேலும், இத்தகைய கட்டத்தில் அவள் தனது கணவனுடன் உடலுறவு கொள்வ தும் தடையாகாது. இவ்விரத்தத்திற்கு கடமையான குளிப் பும் கிடையாது. எனினும், அவள் தொழும் நேரத்தில் இரத் தத்தைக் கழுவி, இரத்தம் வெளியே வராது இருப்பதை தடுப் பதற்காக ஒரு துணியினால் மறை உறுப்பை கட்டிக் கொண்டு பின்னர் தொழுகைக்காக வுழூ செய்து கொள் வாள். பர்ளான தொழுகை போன்று நேரம் குறிப்பிடப்பட்ட தொழுகையாக இருந்தால் நேரம் நுழைந்ததன் பின்னரே வுழூச் செய்ய வேண்டும். நப்லான தொழுகையை நிறை வேற்ற விரும்பினால் அவ்வப்போது அவள் அதற்காக வுழூ செய்து கொள்வாள்.

இரண்டாம் வகை : சத்திர சிகிச்சை தொடர்ந்து அவளுக்கு மாதவிடாய் வருவது நின்றுவிடும் என்று கூற முடியாத நிலை. இந்நிலையில் மாதவிடாய் வருவது சாத்தியம் என்ற அடிப்படையை வைத்து முஸ்தஹாழாவுக்குரிய சட்டங்கள் பின்பற்ற வேண்டும். இதற்காதாரமாகக் கீழ்க்காணும்

ஹதீஸ் அமைகின்றது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பாத்திமா பின்த் அபீ ஹுபைஷ் அவர்களுக்கு பின்வருமாறு கூறினார்கள் 'அது மாதவிடாயல்ல அது இரத்த நாலத்திலிருந்து ஏற்படும் ஒரு உபாதையாகும். எனவே, (உண்மையான) மாதவிடாய் ஆரம்பமானால் தொழுகையை விட்டுவிடுங்கள்'. 'மாதவிடாய் ஆரம்பித்தால்' என்ற கூற்றானது முஸ்தஹாழாவிற்குரிய சட்டங்களான ஆரம்பமும் முடிவுமுள்ள மாதவிடாய் ஏற்படுகின்ற ஒரு பெண்ணுக்கு பொருந்தும் என்பதையும் மாதவிடாய் ஏற்பட வாய்பற்ற பெண்ணைப் பொருத்தவரை அவளிடம் வெளிவரும் இரத்தம் இரத்த நாலத்திலிருந்து ஏற்படும் என்பதைக் காட்டுகிறது.

## (இஸ்திஹாழாவின் ) தொடர் உதிரப் போக்கின் சட்டங்கள்:

மேற்கூறப்பட்டவற்றிலிருந்து பெண்களிடமிருந்து வெளிவரும் இரத்தம் எப்போது மாதவிடாய் இரத்தமாக இருக்கும், எப்போது இஸ்திஹாழா –தொடர் உதிரப்போக்கு- இரத்தமாக இருக்கும் என்பதை நாம் அறிந்து கொண்டோம். எனவே மாதவிடாயாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அதற்குரிய சட்ட ஒழுங்குகளையும், இஸ்திஹாழாவாக இருந்தால் அதற்குரிய சட்டங்களையும் கடைப்பிடிக்க வேண்டும்

மாதவிடாய்குரிய முக்கிய சட்ட ஒழுங்குகள் பற்றி நாம் முன்னரே அறிந்து கொண்டோம். தற்போது 'இஸ்திஹாழாவின்' தொடர் உதிரப்போக்கின் சட்டதிட்டங்களை அறிந்து கொள்வோம்.

'இஸ்திஹாழாவின்'; தொடர் உதிரப்போக்கின் சட்டதிட்டங் கள் யாவும் ஒரு பெண் தூய்மையாக இருக்கும் நிலையில் பின்பற்ற வேண்டிய சட்ட ஒழுங்குகளேயாகும். அந்த வகை யில் 'முஸ்தஹாழா' தொடர் உதிரப்போக்கு ஏற்பட்ட பெண் களுக்கும் தூய்மையடைந்த பெண்களுக்குமிடையில் பின் வரும் விடயங்களில் தவிர எவ்வித வேறுபாடும் கிடையாது. அவைகள் வருமாறு :

**முதலாவது : -முஸ்தஹாழா-** தொடர் உதிரப்போக்கு ஏற் பட்ட பெண்கள் தமது ஒவ்வொரு தொழுகைக்காகவும் தனித்தனியாக வுழூ செய்வது கடமையாகும். இதற்கான ஆதாரம் பின்வரும் ஹதீதாகும்: நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பாத்திமா பின்த் அபி ஹுபைஷ் அவர்களுக்கு 'நீங்கள் ஒவ்வொரு தொழுகைக் கும் வுழூ செய்யுங்கள்' என்று கட்டளை பிறப்பித்தார்கள். (புஹாரி. பாடம் : இரத்தத்தைக் கழுவிக் கொள்ளுதல்.) இதன் கருத்தாவது, பர்ழான தொழுகைகளுக்கு அதற்குரிய நேரம் வந்த பின்னரே வுழூ செய்ய வேண்டும் என்பதாகும். ஆனால் நேரம் குறிக்கப்படாத நப்லான தொழுகையாக இருந்தால் அவள் அதனை நிறைவேற்ற விரும்பும் வேளை வுழூ செய்து கொள்ளல் வேண்டும்.

**இரண்டாவது:** வுழூ செய்ய முன்னர் இரத்த கறைகளைக் கழுவி தூய்மைப்படுத்தி, இரத்தத்தை உறிஞ்சி வைத்துக் கொள்வதற்காக அவளது மறைவான பகுதியில் ஒரு துணித் துண்டை கட்டிக்கொள்ள வேண்டும். இதற்கு நபியவர்கள் ஹம்னா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு கூறிய வழி

காட்டல் ஆதாரமாக உள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஹம்னா பின்த் ஜஹ்ஷ் அவர் களுக்கு: 'நீர் பருத்தித் துணியை பயன்படுத்துவீராக. அது இரத்தத்தை உறிஞ்சிக் கொள்ளும்' அப்பொழுது அவள், 'அதைவிட மிக அதிகமாக வருகின்றதே' எனக் கூறினாள். 'அவ்வாறாயின் (பெரிய அளவிலான) துணியை வையுங் கள்.' என்றார்கள். 'அப்பொழுதும் அதைவிட அதிகமாக வருகின்றதே எனக் கூறினாள் அந்தப் பெண். 'அவ்வாறா யின் உமது மறைவான இடத்திலிருந்து வரும் இரத்தத்தைக் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ளும் வகையில் ஒரு துணியை வைத்து, இருக்கமாக கட்டிக்கொள்ளவும் என்று கூறினார்கள். அவ்வாறு இருகக் கட்டியதன் பின் வெளி வரும் எதுவும் எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.

நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பாதிமா பின்த் அபீ ஹுபைஷ் அவர்களுக்கு இவ்வாறு கூறினார்கள்: 'உமது வழமையான மாதவிடாய் நாட்களில் தொழுவதிலிருந்து விலகி இருங்கள். பின்பு குளித்துக் கொள்ளுங்கள். மேலும் ஒவ்வொரு தொழுகைக்காகவும் வுழூ செய்து கொண்டு தொழுகையை நிறைவேற்றுங்கள். அப்பொழுது இரத்தத் துளிகள் விரிப்பில் விழுந்தாலும் சரியே!' (அஹ்மத், இப்னு மாஜஹ்)

**மூன்றாவது :** உடலுறவு கொள்ளுதல் : இதற்கான அனுமதி பற்றி அறிஞர்கள் கருத்து முரண்பாடு கொண்டுள்ளார்கள். இதனை விட்டுவிடுவதால் விபச்சாரம் நிகழும் என்று பயந்தால் உடலுறவு கொள்வதற்கு அனுமதியுள்ளது.

என்றாலும் இந்த சட்டப்பிரச்சினையில் சரியான கருத்து விபச்சாரம் நிகழும் என்று பயந்தாலும் பயப்படாமல் இருந் தாலும் உடலுறவு அனுமதிக்கப்பட்டது என்பதாகும். ஏனெ னில் நபியவர்களின் காலத்தில் வாழ்ந்த பெண்கள் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட பெண்கள் (இஸ்திஹாழா) தொடர் உதிரப்போக்கு ஏற்படுவோராக இருந்துள்ளனர். என்றாலும் அல்லாஹ்வோ அவனின் தூதரோ இதனைத் தடுக்கவில்லை. *'மாதவிடாய்க் காலத்தில் பெண்களுடன் உடலுறவு கொள்வதை விட்டு விலகி இருங்கள்'*

(அல் பகரா: 222)

இந்த வசனமானது பெண்கள் மாதவிடாய் ஏற்பட்டிருக்கும் போது மாத்திரம் உடலுறவு கொள்வது கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்கான ஆதாரமாவும் ஏனைய காலத்தில் உடலுறவில்; ஈடுபடுவது அனுமதிக்கப் பட்டது என்பதற்கான ஆதாரமாகவும் காணப்படுகிறது. ஆகவே இஸ்திஹாழாவின் போது பெண்களுக்குத் தொழு வதற்கு அனுமதியுள்ளது என்றால் உடலுறவு கொள்வது என்பது அதை விட எளிதான சிக்கலற்ற விடயமுமாகும். மாதவிடாய் ஏற்பட்டிருக்கும் போது உடலுறவு கொள்வது தடுக்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு இஸ்திஹா ழாவுடைய நிலமையிலும் அதனை அனுமதிக்காது தடை செய்வதென்பது 'கியாஸ் மஅல் பாரிக்;' அதாவது வித்தியாச மான வேறுபட்ட விடயங்களை ஒன்றினைத்து ஒப்புநோக்கி சட்டத்தை பெறுதல் என்ற நிலைக்கு உட்படுகிறது. இந்த வகையில் இஸ்திஹாழா நிலமையில் உடலுறவு கொள்வது அனுமதிக்கப்பட்டது என்பதே சரியான நிலைப்பாடாகும்.

*

## ஆறாவது பகுதி:

# நிபாஸும் (பேறுகால உதிரப்போக்கும்) அதன் சட்டங்களும்

நிபாஸ் என்பது, பேறு காலத்தின் போதோ, பிரசவத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களளுக்கு முன்போ அல்லது பின்போ பெண்ணின் கர்ப்பப்பையில் இருந்து வலியுடன் வெளியாகும் இரத்தத்தைக் குறிக்கும்.

ஷெய்ஹுல் இஸ்லாம் இப்னு தைமியா கூறுகிறார்:

ஒரு பெண் பிரசவ வேதனை ஆரம்பமாவதுடன் இரத்தம் வெளிவரக் கண்டால் அது நிஃபாஸ் ஆகும். அது இரண்டு அல்லது முன்று நாட்களுக்கென வரையறுக்கப்படவில்லை. இதன் கருத்தாவது : பிரசவ வேதனையைத் தொடர்ந்து பிரசவம் நிகழ்ந்தால் அது நிபாஸ் இரத்தமாகும். இல்லா விடில் அது நிபாஸ் இல்லை. அதன் நாட்களுக்கு எல்லை இருக்கின்றதா என்பதில் அறிஞர்கள் கருத்துவேறுபட்டுள்ள னர்.

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தனது நூலில் 'நிஃபாஸ் வெளிவரும் காலத்தை பொறுத்த வரையில் குறைந்த பட்ச காலம் கூடிய காலம் என்ற வரம்பு கிடையாது. ஒரு பெண்ணுக்கு நாற்பது,

அறுபது அல்லது எழுபது நாட்களுக்கு மேலாக இரத்தம் வந்து பின்பு நின்றுவிடுகின்றது என்றால் அது நிபாஸு டைய இரத்தமாகும். சிலவேளை இவ்விரத்த வெளியேற்றம் தொடருமாயின் அப்பொழுது நிஃபாஸ் என்பதற்கான உச்ச கட்ட வரம்பு நாற்பது நாட்களாகக் கொள்ள வேண்டும் இதுவே அதிகமான பெண்கள் காணும் சாதாரண கால எல்லையாகும். அத்துடன் இக்கால எல்லை குறித்து சில சான்றாதாரங்களும் (ஸஹாபாக்கள் தாபிஈன்களின் கூற்றுக் களும்) வந்துள்ளன'.

எனது நிலைப்பாட்டைப் பொறுத்தவரை 'மேற் குறிப்பிட்ட வற்றின் அடிப்படையில் ஒரு பெண்ணுக்கு நாற்பது நாட் களுக்கு மேல் இரத்தம் தொடர்ந்தும் வருகிறது என வைத் துக் கொள்வோம். முன்னைய கால வழமையின் படி அதற் குப்பின் நின்றுவிடுமென்றிருப்பின் அல்லது நிற்பதற்கான அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் அது நிற்கும் வரை எதிர் பார்த்திருப்பாள். இல்லாவிடில் நாற்பது நாட்களைப் பூர ணப்படுத்தி, குளித்து தன்னை சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மறுபுறம், அந்த நாற்பது நாட்களையும் பூரணப் படுத்திய தைத் தொடர்ந்து அவளுக்கு மாதவிடாய் காலம் நேர்படுமா யின் அக்காலம் முடியும் வரை பொறுத்திருக்க வேண்டும். அதன் பின்பு அது நின்றுவிடுமானால் அதனை வழமையாக ஆக்கி எதிர்காலத்தில் அதனடிப்படையில் கணித்துக் கொள்ள வேண்டும். எனினும், அவளது வழக்கமான மாத விடாய் காலத்தையும் கடந்து இரத்த வெளியேற்றம் இருக்கு

மாயின் அப்பொழுது அதனை இஸ்திஹாழாவாகக் கருதி அதன் சட்டங்களை அவள் கடைப்பிடிப்பாள்.

அதே வேளை, நாற்பது நாற்களுக்கு முன்னரே நிபாஸ் நின்று சுத்தமடைந்து விட்டால் அவள் குளித்து தொழுவதற் கும் நோன்பு நோற்பதற்கும் உடலுறவு கொள்வதற்கும் அனுமதி உண்டு. இரத்தம் நின்று விடுவது ஒரு நாளைக்கும் குறைவாக இருந்தால் அதற்கு எந்த சட்டமும் கிடையாது. இது அல் முஃனி; என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு பெண் தெளிவான மனித உருவை பெற்றெடுக்காத வரையில் அவளது நிபாஸை உறுதிப்படுத்த முடியாது. விழு கட்டியை பெற்றெடுத்து அது நன்கு வளர்ச்சியடைந்த மனித உருவின் அமைப்பைத் தெளிவாகக் காட்டாத நிலையில் அதனுடன் வெளிவந்த இரத்தத்தை நிபாஸ் எனக் கொள்ள முடியாது. மாறாக அது இரத்த நாலத்திலிருந்து வெளிவந்த இரத்தம் என்றே கருத வேண்டும். ஒரு மனித உரு கருவில் உருவாகி வளர்ச்சியடைவதற்கு அது கருத்தரித்த தினத்திலி ருந்து மிகக் குறைந்தபட்சம் எண்பது நாட்கள் ஆகும்; கூடிய பட்சம் தொண்ணூறு நாட்களாகும்.

அல் மஜ்த் இப்னு தைமிய்யா அவர்கள் பின்வருமாறு கூறு கிறார்: 'ஒரு பெண் எப்போது பிரசவவேதனைக்கு முன் இரத்தம் வரக் கண்டால் அதை பொருட்படுத்த வேண்டிய தில்லை. பிரசவ வேதனையின் பின் இரத்தம் வரக்கண்டால் அவள் தொழுகை நோன்பு என்பவற்றிலிருந்து விலகி இருக்க வேண்டும். என்றாலும் அவள் தனது குழந்தையைப்

பிரசவித்ததன் பின் பிரசவ வேதனைக்கு முன் வந்த இரத்தம் நிபாஸாக இருந்ததை அறிந்தால் அவள் அக்காலப்பகுதி யில் விட்ட தொழுகைகளையும் நோன்பையும் மீண்டும் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு இல்லாதிருந்தால் வெளி ரங்கமான சட்டத்தையே கடைப்பிடிக்க வேண்டும். ஆகவே தொழுகை மற்றும் நோன்புகளை மீண்டும் கழாச் செய்ய வேண்டியதில்லை' இக்னாஃ என்ற நூலின் விரிவுரையில் மஜ்த் இப்னு தைமியா கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிபாஸுக்குரிய (பேறு காலத்தில் ஏற்படக்கூடிய இரத்தத் தின்) சட்டங்கள்:**

நிபாஸுக்குரிய சட்டங்கள் யாவும் மாதவிடாய்க்கான சட் டங்களைப் போன்றதுதான். ஆனால் பின்வரும் விடயங்க ளில் வித்தியாசப்படுகின்றன:

**முதலாவது:** இத்தா நிஃபாஸுடன் அல்லாது விவாகரத்தின் மூலமே கணிக்கப்படுகிறது. அதாவது: தலாக் (விவாகரத்து) பிரசவத்திற்கு முன்னர் செய்யப்பட்டால் இத்தாவானது பிரசவத்துடன் முடிவடைகின்றது. அன்றி, அதற்கும் நிபா ஸுடைய காலத்திற்கும் எதுவிதத் தொடர்புமில்லை. சில வேளை பிரசவத்தின் பின் தலாக் சொல்லப்பட்டால் அவள் தனது மாதவிடாய் வரும்வரை காத்திருந்து முன்னறே விவரித்தபடி அவளது இத்தாவை கணிக்க வேண்டும்.

**இரண்டாவது**: 'ஈலாவுடைடைய காலம் மாதவிடாய் காலத்தை வைத்தே தீர்மானிக்கப்படுமே தவிர நிபாஸு டைய காலத்தை வைத்து தீர்மானிக்கப்படுவதில்லை.

'அல் ஈலாஉ' என்பது ஒரு கணவன் நிரந்தரமாக அல்லது நான்கு மாதத்திற்கு மேல் தனது மனைவியுடன் உடலுறவு கொள்வதில்லையென சத்தியம் செய்வதைக் குறிக்கும்.- இத்தகைய கட்டத்தில் குறித்த மனைவி, உடலுறவு கொள்ள வேண்டும் என உரிமையுடன் கேட்பாளாயின் அக்கணவ னுக்கு சத்தியம் செய்த நாளிலிருந்து நான்கு மாதங்கள் அதற்காக கால அவகாசம் வழங்கப்படும். இக்கால எல்லை நிறைவடைந்ததும் ஒன்றில் உடலுறவில் ஈடுபட அல்லது மனைவியை பிரிவதற்கு (நீதிபதியால்) கட்டாயப்படுத்தப் படுவார். எனவே, இக்கால எல்லைக்குள் மனைவிக்கு நிபாஸ் ஏற்பட்டால் அது கணவன் மீது கணிக்கப்படமாட் டாது. அவள் சுத்தமாவதற்கு சமமான காலத்தைக் கணித்து ஈலாவுடைய காலத்துடன் சேர்க்கப்படும். இது மாதவிடாயி லிருந்து வித்தியாசமானது. மாதவிடாய்குரிய காலம் கணவன் மீது கணிக்கப்படும்.

**மூன்றாவது :** ஒரு பெண்ணின் பருவமடைதல் என்பது மாத விடாய் ஏற்படுதலின் மூலமே நிகழ்கிறது. மாற்றமாக நிபாஸ் ஏற்படுவதைக் கொண்டல்ல. அவளைப் பொருத்த வரை ஒரு வகை நீர் வெளிப்படும் வரையில் கருத்தரிப்பது நிகழமாட்டாது. ஆகவே பருவமெய்தல் என்பது கருத்தரிப் பதற்கு முன்னர் வெளிப்படும் நீரின் மூலம் ஏற்படும் ஒரு விடயமாகும்.

**நான்காவது :** மாதவிடாய் இரத்தமானது இடையில் நின்று விட்டு பின்னர் மீண்டும் வழமையான சுழட்சி முறைப்படி வந்தால் அது உண்மையான மாதவிடாயாகும். உதாரண

மாக ஒரு பெண்ணின் வழமையான மாதவிடாய் காலம் எட்டு நாட்களாக இருந்து, அது நான்காவது நாளில் நின்று விடுகிறது எனக் கொள்வோம். பின் தொடர்ந்து இரண்டு தினங்கள் ஐந்தாம் ஆறாம் நாட்களிலும் அதே நிலையில் இருப்பதைக் காண்கிறாள். பின் ஏழாம் எட்டாம் நாட்களில் மீண்டும் இரத்தம் வெளிப்படுவதைக் கண்டால் அது மாத விடாயாகவே கருதப்படும் அப்போது அதற்குரிய சட்டங் களைப் அவள் பின்பற்ற வேண்டும்.

ஆனால் நிஃபாஸுடைய இரத்தம் நாற்பது நாட்களுக்கு முன் நின்று, மீண்டும் நாற்பதாவது நாள் வெளிவருகின்ற தெனில் அது சந்தேகத்திற்குரியது. அப்போது அவள் உரிய வேளையில் தொழுகை, நோன்பு ஆகிய கடமைகளை நிறை வேற்ற வேண்டும். கட்டாயக் கடமைகளைத் தவிர வேறு எவையெல்லாம் மாதவிடாய் ஏற்பட்ட பெண்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளனவோ அவை இவளுக்கும் தடை யானவையே. மாதவிடாய் ஏற்பட்ட ஒரு பெண் எவற்றை யெல்லாம் கழா செய்கிறாளோ அவற்றை இவளும் கழாச் செய்ய கடமைப்பட்டவளாவாள். இதுவே ஹன்பலி மத்ஹப் சட்ட அறிஞர்களின் பிரபல்யமான நிலைப்பாடாகும்

இதில் சரியான நிலைப்பாடு யாதெனில் 'நிபாஸுடையதாக இருக்கும் என்று கருதக்கூடிய காலப்பகுதியாகியில் இரத் தம் வெளிப்படுமாயின் அது நிபாஸுடைய இரத்தமாகவும் அவ்வாறு இல்லாவிட்டால் அது மாதவிடாயாகவும் கருதப் படும். அது தொடர்ந்தும் ஏற்பட்டால் இஸ்திஹாழா இரத்த மாகும்.'

இக்கூற்றானது இமாம் மாலிகின் மூலமாக குறிப்பிடப்பட்ட கருத்துக்கு மிக நெருக்கமான கூற்றாக உள்ளது. அக் கூற்றையே (இமாம் இப்னு குதாமா அல் மக்திஸி அவர்கள்) முஃனி என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இமாம் மாலிகின் கருத்து வருமாறு : இரத்தம் வெளிவருவது நின்று இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப்பின் மீண்டும் வரக்கண்டால் அது நிஃபாஸுடைய இரத்தமாகும். அவ்வாறில்லையாயின் அது மாதவிடாயுடைய இரத்தமாகும். என்று குறிப்பிடுகி றார்.

இதையே ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா அவர்களின் தேர்வுமாகும். அதாவது நடை முறை ஒழுங்கில் இரத்தத்தில் எதுவும் சந்தேகத்திற்கிடமானவை என்பது இல்லை. சந் தேகம் என்பது ஒரு ஒப்பீட்டளவிலான விடயமாகும். அது மனிதர்களின் அறிவு, புரிதல் ஆகியவற்றின அடிப்படையில் வித்தியாசப்படும். அல்லாஹ் அருளிய குர்ஆனிலும், தூதர் முஹம்மத் அவர்களுடைய சுன்னாஹ்விலும் அனைத்துக்கு மான தெளிவு இருக்கிறது.

நோன்பு, தவாஃப் போன்ற கடமைகளை நிறைவேற்றும் பொழுது முதற் தடவையாக ஏதும் தவறுகள் நடந்தாலன்றி அவற்றை இருமுறை நிறைவேற்றும்படி அல்லாஹ் எவருக் கும் பணிக்கவில்லை. ஒரு அடியானுக்குரிய பணிகள் அல் லது கடமைகள் யாவும் அவனின் சக்திக்குட்பட்ட வகையில் தான் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு அவன் நிறை வேற்றும் போது அவனது பொறுப்பு நீங்கிவிடுகிறது. அல்லாஹ் இது குறித்து குறிப்பிடுகையில்: *'எந்த ஒரு*

*ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல் அல்லாஹ் சிரமப் படுத்தமாட்டான்'* (அல்பகரா :286) மேலும் அல்லாஹ் *'உங்களால் முடியுமான அளவு அல்லாஹ்வைப் பயந்து கொள்ளவும்'* என்று கூறுகிறான். (தஃகாபுன்: 16)

மாதவிடாய்க்கும் நிபாஸுக்குமிடையிலான ஐந்தாவது வித்தியாசம் : ஒரு பெண் வழமையான மாதவிடாய் காலத் திற்கு முன்னர் சுத்தமடைந்து விடுவாளாயின் அவளது கண வர் அவளுடன் உடலுறவு கொள்வதற்கு அனுமதியுண்டு. நிபாஸைப் பொறுத்தவரையில் ஹன்பலி மத்ஹபின் பிரபல் யமான கருத்தின் படி நாற்பதுக்கு முன் அவள் சுத்தமானால் உடலுறவு கொள்வது மக்ரூஹ் (வெறுக்கப்பட்டது) ஆகும். என்றாலும் இது வெறுக்கப்பட்டதல்ல என்பதே சரியான கருத்தாகும். அதுவே (நிபாஸ் நின்று விட்டால் உடலுறவு கொள்வது அனுமதிக்கப்பட்டது என்பதே) பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துமாகும்.

ஏனெனில் விரும்பப்படவில்லை (மக்ரூஹ்) என்பது இஸ்லா மிய சட்டமாகும். எனவே, அவ்வாறு சொல்வதற்கு மார்க்க ஆதாரம் அவசியமாகும். இது தொடர்பாக இமாம் அஹ்மத் அவர்கள் உஸ்மான் இப்னு அபில் ஆஸ் அவர்கள் மூலம் அறிவிக்கும் ஒரு விடயத்தைத் தவிர வேறு ஆதாரமில்லை. அந்த சான்று பின்வருமாறு 'அபில் ஆஸின் மகன் உஸ் மானை அவரது மனைவி தனது (நிஃபாஸின்) நாற்பது நாட் களுக்குரிய கால எல்லை முடிவடையும் முன்னர் நெருங்கி னார். அப்பொழுது அவர் (கணவரான உஸ்மான்) 'என்னி டம் நெருங்கவேண்டாம்' என்றார்.' இந் நிகழ்வு நிபாஸின்

போது உடலுறவு கொள்வது மக்ரூஹ் என்பதை வேண்டி நிற்காது. மாறாக அவர் அவ்வாறு சொல்வதற்கு, அவள் நிபாஸிலிருந்து சுத்தமாகிவிட்டாளா என்பதில் உறுதி இல் லாமல் இருக்கலாம் என நினைத்திருக்கலாம்; அல்லது அவ ளுடன் உடலுறவு கொள்வதால் மீண்டும் இரத்தம் வர ஆரம் பித்து விடலாம் என நினைத்திருக்கலாம்; அல்லது வேறு காரணங்களும் இருக்கக்கூடும். அல்லாஹ் மிக அறிந்தவன்.

*

## ஏழாவது பகுதி:

# மாதவிடாய் வராது தடுக்கின்ற அல்லது அதனை வரவழைக்கத்தக்க, அல்லது கருவுறாது தடுக்கக்கூடிய அல்லது கருக்கலைப்பை ஏற்படுத்தக்கூடியவற்றை பயன்படுத்தல்.

ஒரு பெண் மாதவிடாயை தடுப்பதற்குரிய மாத்திரை அல்லது அது போன்றவற்றை பின்வரும் இரண்டு நிபந்தனைகளின் அடிப்படையில் பயன்படுத்த அனுமதியுள்ளது.

**முதலாவது :** பெண்ணுக்கு அதனைப் பயன்படுத்துவதால் எவ்விதப் பாதிப்பும் ஏற்படக் கூடாது. அவ்வாறு பாதிப்பு ஏற்படுமாயின் அதனை பயன்படுத்துவது கூடாது. ((இது குறித்து அல்லாஹ் '*உங்களின் கைகளின் மூலமே உங்களுக்கு அழிவைத் தேடிக்கொள்ளாதீர்கள்*' எனக் கூறுகின்றான் (அல்பகரா :195). மேலும் அல்லாஹ் குறிப்பிடுகையில் : '*உங்களை நீங்களே கொன்று விடவேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் உங்களுடன் அன்புடையவனாக இருக்கின்றான்*' (அந்நிஸா :29)

**இரண்டாவது :** மாதவிடாயை தடுக்கின்றவற்றை பயன் படுத்துவதால் அது கணவரைப் பாதிக்குமாயின் அப்பொ ழுது அவரது அனுமதியைப் பெறுவது பிரதானமாகும். உதா ரணமாக, ஒரு பெண் விவாகரத்துக்கான இத்தாவில் இருப்ப தாக வைத்துக் கொள்வோம், அப்பொழுது அவளுக்கான செலவை கணவரே பொறுப்பேற்றிருப்பார்;. அவள் தனது இத்தா காலத்தை நீடிக்க மாதவிடாய்த் தடுப்புகளைப் பயன் படுத்துகிறாள். இவ்வேளை கணவன் அவளுக்காக அதிகம் செலவு செய்ய வேண்டியிருக்கும். எனவேதான், அவள் தனது கணவரிடம் அனுமதியைப் பெறாமல் அவற்றைப் பயன்படுத்துவது கூடாது.

அதேபோல், மாதவிடாய்த் தடுப்புக்களை பயன்படுத்துவ தால் ஒரு பெண் கருத்தரிக்காது விடலாம் என்ற அச்சம் இருக்குமாயின், அப்பொழுதும் கணவரின் அனுமதியின்றி அத்தகைய தடுப்பு முறைகளைப் பயன்படுத்துவது கூடாது. இவ்வாறு தடுப்புகளை உபயோகிப்பது அனுமதிக்கப்பட்ட தாக இருப்பினும் அதனை பயன்படுத்தாது இருப்பதே மிக வும் சிறந்தது. இயற்கையாக வெளிவரும் இந்த இரத்தத்தை அவ்வாறே விட்டுவிடுவது ஆரோக்கியத்திற்கும் பாதுகாப் பிற்கும் நல்லதாகும்.

அதே போன்று மாதவிடாயை வரவழைக்கின்றவற்றை பயன்படுத்துவதும் பின்வரும் இரண்டு நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதலாவது :** ஒரு கடமையிலிந்து விலகிச் செல்வதற்கான உபாயமாக இருக்கக் கூடாது. அதாவது ரமழான் நெருங்கி வரும் வேளையில் நோன்பு நோற்காமலும், தொழாமலும் இருப்பதற்காக பயன்படுத்துதல்.

**இரண்டாவது:** மாதவிடாய் ஏற்படுவதற்கான மருந்துக ளைப் பயன்படுத்த தனது கணவனின் அனுமதியைப் பெற் றிருக்க வேண்டும். ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்படு வதற்கான மருந்து உபயோகிப்பதன் மூலம் அவளுக்கு மாத விடாய் உண்டாகி, அவளது கணவன் அவளுடன் முழு இன் பத்தையும் அனுபவிக்க அது தடையாக இருக்கிறது. எனவே தான் அதனை பயன்படுத்துவதற்கான அனுமதியைப் அவள் தனது கணவனிடம் பெறவேண்டும். மேலும், அவள் விவா கரத்து செய்யப்பட்டிருந்து, அது மீட்டெடுப்புக்குரிய கால மாக இருப்பின் அவளது கணவன் அவளை மீட்டெடுக்கும் இத்தா காலம் துரிதமாக முடிவடைந்துவிடுவதற்கு காரண மாக அமையும். அதாவது இஸ்லாமிய ஷரீஆ வரையறுத்த கால எல்லைக்கு முன்னறே மீட்டெடுத்துக் கொள்வதற்கான காலம் முடிவடையும் அபாயம் உள்ளது.

**கருத்தரிப்பதை தடுக்கக் கூடியவற்றைப் பயன்படுத்தல்.** இது இரண்டு வகைப்படும்.

**முதலாவது வகை :** கருத்தரிப்பை முற்றாகத் தடுப்பவை. இவ்வாறானவற்றை உபயோகிப்பதற்கு அனுமதியில்லை, (இவற்றை பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டதாகும்) காரணம் அது கருவுருவதை தடுத்து சந்ததிகளைக் குறைத்து

விடுகிறது. இது முஸ்லிம்கள் பெருக வேண்டும் என்ற இஸ்லாமிய ஷரீஆவின் இலக்கிற்கு முரணான விடயமா கும். அத்துடன் இவ்வாறான நிரந்தர கருத்தடை மருந்து களை உபயோகிப்பதால் ஒரு பெண் தனக்கிருக்கும் பிள் ளைகள் எல்லோரும் மரணமடையாது இருப்பர் என்று உறுதி கூற முடியாது. இக்கட்டத்தில் நிரந்தர கருத்தடை செய்து பிள்ளைப் பெறுவதை தடை செய்து கொண்டால் அவளது பிள்ளைகள் மரணித்து சந்ததியற்றவளாக இருக் கும் நிலை ஏற்படலாம்.

**இரண்டாவது வகை:** தற்காலிகமாக கருத்தரிப்பை தடுத்து கொள்ளல். இந்த வகையைப் பொருத்தவரை ஒரு பெண் அதிகம் கருத்தரிப்பவளாக இருக்கிறாள், அவ்வாறு அவள் அடிக்கடி ஒவ்வொரு வருடமும் கருத்தரிப்பது அவளைப் பலவீனமடையச் செய்கிறது. ஆதலால் அவள் தனது கருத் தரித்தலை இரண்டு வருடத்திற்கு ஒரு முறை அல்லது அது போன்று ஒழுங்குபடுத்திக் கொள்ள விரும்புகிறாள். இவ் வாறு செய்வதில் எவ்விதப் பிரச்சினையும் கிடையாது., அவ ளது கணவனும் அனுமதியளித்து, அந்த கருத்தடை சாதனங் களைப் பயன்படுத்துவதில் எவ்விதப் பாதிப்பும் இல்லை எனக் கண்டால் இக்கட்டத்தில் தற்காலிக கருத்தடை சாத னங்களை மருந்துகளை பயன்படுத்துவது அனுமதிக்கப் பட்டதே!

இதற்கு ஆதாரமாக பின் பின்வரும் செய்தி உள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் காலத்தில் நபித்தோழர்கள் தமது பெண்கள் கருவுராமல் இருப்பதற்

காக விந்து பெண்ணை சென்றடைவதை 'அZஸ்ல்' தடை செய்தார்கள்! இதனை அவர்களுக்கு நபியவர்கள் தடை செய்யவில்லை. 'அZஸ்ல்' என்பது ஒருவர் தன்னுடைய மனைவியுடன் பாலுறவு கொண்டு விந்து வரும் கட்டத்தில் தனது ஆணுறுப்பைப் பெண்ணுறுப்பிலிருந்து எடுத்து விந்தை வெளியில் விடுவதையே குறிக்கும்.

கருக்கலைப்பு செய்வதற்கான மருந்துகளைப் பயன்படுத்து வது இருவகைப்படும்.

**முதலாவது வகை:** ஒரு பெண்ணின் கருப்பையில் உள்ளதை அழித்துவிட நாடுதல். இந்த வகையைப் பொருத்த வரை அந்த கருவானது உயிரூட்டப்பட்டதைத் தொடர்ந்து இவ் வாறு செய்ய நாடினால் அது தடைசெய்யப்பட்டதாகும்-ஹராமாகும் என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. ஏனெனில், அது எவ்வித நியாயமான காரணமுமின்றி ஓர் உயிரைக் கொலைசெய்யும் கொடிய குற்றச் செயலாகும்' இவ்வாறு செய்வது அல் குர்ஆன், ஸுன்னா, இஜ்மா போன்ற அடிப்படைகளின் படி ஹராமானதாகும்.

உயிர் ஊதப்படுமுன் கருவை கலைப்பதை பொருத்தவரை அறிஞர்களிடம் இரு வேறுபட்ட கருத்துக்கள் காணப்படு கின்றன. சில அறிஞர்கள் 'அனுமதிக்கத்தக்கது' எனவும் மற் றும் சிலர் அனுமதிக்கத்தக்கதல்ல எனவும் கூறுகின்றனர். சில அறிஞர்கள் அது 'அலகா' (இரத்தக் கட்டி) என்ற நிலை யில் இல்லாமலிருந்தால் அனுமதிக்கப்படலாம் என்று கூறு கின்றனர். அதாவது கருத்தரித்து நாற்பது நாட்களுக்குக்

குறைவாக இருக்கும்போது அது அனுமதிக்கப்படலாம் என்பது அவர்கள் கருத்தாகும். எனினும் மற்றும் சிலரின் கருத்துப்படி கரு மனித உருவின் அமைப்பைப் பெறாத நிலை வரை இது அனுமதிக்கப்படலாம் எனக் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும், நியாயமான எவ்விதக் காரணமுமின்றி கருவை கலைக்காமல் இருப்பதில் கவனம் செலுத்துவதே பேணுதலுக்குரிய காரியமாகும். உதாரணமாக ஒரு தாய் கருவை சுமக்க முடியாத அளவுக்கு சுகயீனமுற்று இருப்பாளாயின் அவளது அந்தக் கரு மனித உருவமைப்பை பெற்றில்லாவிட்டால் அதை கலைப்பது அனுமதிக்கப்படும். அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

**இரண்டாவது வகை :** கருவை அழிக்கும் நோக்கம் இன்றி அதனை வெளியே எடுத்தல். அதாவது ஒரு பெண் கர்ப்ப காலம் முடிவுற்று பிரசவம் அண்மித்த வேளையில், தாய்க்கும் அவளின் பிள்ளைக்கும்; எவ்விதத் தீங்கு ஏற்படாதவாறு, சத்திரசிகிச்சை இல்லாது மிகக் கவனமாகக் காரியமாற்றி பிள்ளையை வெளியே எடுப்பது அனுமதிக்கப்பட்டுள்ளது. என்றாலும் சத்திர சிகிச்சை மேற்கொண்டு கருவை அகற்றுவதாக இருந்தால் அதற்கு பின்வரும் நான்கு வழி முறைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

**வழிமுறை (1)** தாயும் சேயும் உயிருடன் இருக்கும் போது பிள்ளையைப் பெற்றெடுப்பதில் சிக்கல்கள் ஏதும் இருப்பின் இத்தகைய கட்டத்தில் மாத்திரம் சத்திர சிகிச்சை மூலம் பிள்ளையை வெளியே எடுப்பது அனுமதிக்கப்பட்டதாகும்.

இதுவும் நிர்ப்பந்த நிலையில் அனுமதிக்கப்படுவதற்கான காரணம் யாதெனில் மனித உடல் அமானிதமாகும். அதனை மிகப்பெரும் நலனை முன்னிருத்தாது ஓர் ஆபத் தான நிலைமைக்கு உட்படுத்திவிடக் கூடாது. சில வேளை சத்திரசிகிச்சையினால் எவ்விதப்பாதிப்பும் கிடையாது என நினைத்து அதனை மேற்கொண்டு விடுவதனால் பாதிப்பு கள் ஏற்படவும் வாய்ப்புண்டு.

**வழிமுறை (2)** தாயும் சேயும் இறந்திருக்கும் போது சத்திர சிகிச்சை மேற்கொள்வதால் எத்தகைய பயனும் கிடையாது என்பதால் இது அனுமதிக்கப்படவில்லை.

**வழிமுறை (3)** தாய் உயிருடன் இருக்க. சேய் இறந்தபோது தாய்க்கு ஏதும் ஆபத்து நேரும் என்ற அச்சம் இல்லாதிருந் தால் இறந்திருக்கும் சேயை அகற்றுவதற்கு சத்திரசிகிச்சை செய்ய அனுமதியுண்டு. காரணம் இறந்த சேயை சத்திர சிகிச்சை மேற்கொள்ளாது அகற்ற முடியாது என்பது தெளி வான விடயமாகும். மேலும் மரணித்த அந்த சிசுவானது கருப்பையில் தொடர்ந்தும் வைத்திருப்பது அவளுடைய எதிர்கால பிரசவங்களுக்கு சிரமத்தை ஏற்படுத்துவதுடன் பாதிப்பை ஏற்படுத்தலாம். அத்துடன், அவளது முந்திய கண வனிடமிருந்து விவாகரத்து பெற்று இத்தாவில் இருக்கும் பொழுது அந்நிலை இருந்தால் அவளை ஒரு துணையற்ற விதவையாகவே மாற்றிவிட இடமுண்டு. ஆகையால் இவ் வாறான நிலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்வதில் எவ் விதத்தடையும் கிடையாது.

**வழிமுறை (4)** தாய் இறந்து சேய் உயிருடன் இருந்தும் உயிர் பிழைக்க வாய்ப்பில்லை என்று இருந்தால் அப் பொழுது அதனை சத்திர சிகிச்சையின் மூலம் அகற்றுவது அனுமதிக்கப்பட்டதல்ல.

ஆனால், உயிர் பிழைக்க வாய்ப்பிருந்து, அதன் சில பகுதி கள் வெளிவந்திருந்தால் அப்பொழுது –வயிற்றைப் பிளந்து- சத்திர சிகிச்சை மூலம் அதனை வெளியே எடுப்பது அனு மதிக்கத்தக்கதாகும். இதற்கு மாறாக சிசுவின் எதுவும் வெளி வராத கட்டத்தில் வயிற்றைப் பிளந்து சிசுவை வெளியே எடுப்பது அந்த உடலை வதைத்து 'சித்திரவதை செய்தல் என்பதற்கு உட்படும் என்பதால் அதனை எமது ஹன்பலி மத்ஹபை சேர்ந்த சில சட்ட வல்லுனர்கள் அனுமதிக்க வில்லை. ஆனால் சத்திர சிகிச்சையின் மூலமே சிசுவை வெளியே எடுக்கலாம் என்றிருந்தால் அதனை மேற்கொள்வதில் எவ்விதத் தடையும் கிடையாது. இதுவே சரியான நிலைப்பாடுமாகும். இதுவே இமாம் இப்னு ஹுபைராவின் தெரிவுமாகும்.

இது குறித்து அவர் தனது இன்ஸாப் என்ற நூலில் தேவை யேற்படுமென்றிருந்தால் வயிற்றை பிளந்து எடுப்பது என் பதே பொருத்தமான கருத்தாகும் என்று குறிப்பிடுகிறார். குறிப்பாக, இந்த சட்டப்பிரச்சினை தொடர்பாக எனது கருத்து (ஸாலிஹ் இப்னுல் உஸைமீன் நிலைப்பாடு) என்ன வென்றால், வயிற்றை சத்திர சிகிச்சை மூலம் திறந்து உள் ளேயுள்ள பிள்ளையை வெளியே எடுப்பது குறிப்பாக இக் கால கட்டத்தில் அத்தியாவசியமானதாகும். அது சித்திர

வதை என்று கூற முடியாது. காரணம், வயிற்றைத் திறந்து மீண்டும் முன்பிருந்தது போல் அதைத் தைத்து விடும் அளவுக்கு மருத்துவத்துறை வளர்ந்துள்ளது. அதே போல் இறந்து விட்ட ஒருவரை விடவும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரை பாதுகாப்பது மிகவும் புனிதமானது. மேலும் ஒன்றுமே அறியாத ஒரு ஜீவனை அழிவிலிருந்து பாதுகாப்பது மிகப்பெரும் கடமையாகும். ஆகவே கருப்பையில் இருக்கும் உயிருள்ள ஜீவன் பாதுகாக்கப்படவேண்டியது அதனை மீட்டெடுப்பது கட்டாயக் கடமையாகும். அல்லாஹ்வே நன்கறிந்தவன்

குறிப்பு: கருவை கலைப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நிலைகளில் அதற்குச் சொந்தக்காரரான கணவனின் அனுமதியைப்பெறுவது அவசியமாகும்.

இறுதியாக, நான் எடுத்துக் கொண்ட இந்த முக்கிய தலைப்பில் நான் எழுத விரும்பிய என் கருத்துக்களை உங்கள் முன் சமர்ப்பித்து விட்டேன். இங்கு நான், இது தொடர்பான அடிப்படை விடயங்களையும் வரையறைகளையும் மாத்திரமே குறிப்பிட்டுள்ளேன். இத்தலைப்போடு தொடர்பான கிளையம்சங்களும், அதன் உட்பிரிவுகளும், பெண்களுக்கு நிகழ்கின்ற விடயங்களும் கடல் போன்று மிகவும் விசாலமானவை. என்றாலும் இத்துறை பற்றி அறிவுள்ளோருக்கு கிளையம்சங்களை அடிப்படை அம்சங்களோடும் உட்பகுதிகளை பொதுவானவற்றுடனும் அதன் வரையறைகளுடன் ஒப்பிட்டு விளங்கி மிகச் சிறந்த முடிவுகளை அவர்களால் பெறமுடியும். மார்க்கத்தீர்பு வழங்கும் முப்தி அல்லாஹ்வின்

தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கொண்டு வந்ததை மக்களுக்கு எத்திவைப்பதில் அல்லாஹ்வுக்கும் அவனின் அடியார்களுக்கு மத்தியில் மத்தியஸ்தராக உள்ளார் என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் அவர் அல்லாஹ்வின் வேதமான அல்குர்ஆனிலும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது ஸுன்னாஹ்விலும் வந்துள்ளவற்றை பின்பற்றி நடக்கும் பொறுப்புக்குரியவர்.

ஏனெனில் அந்த இரண்டு மூலாதாரங்களில் உள்ளவற்றை விளங்கி அதன் படி ஒழுகவே அடியார்கள் பணிக்கப்பட்டுள்ளனர். அல்குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் முரணானவை தவறுகளாகும். அந்த முரணான கருத்தை கூறியவரிடமே அதனை விட்டு விடுவதுடன் அத்தகைய தவறுகளை நடைமுறைப்படுத்தவோ பின்பற்றவோ கூடாது. அவற்றைத் தனது இஜ்திஹாத் மூலம் மன்னிக்கப்படக்கூடிய ஒரு முஜ்தஹித் முன்வைத்தாலும் சரியே. எனினும் அவரது தவறை அறிந்த பிற ஆலிம் அவரது கருத்தை ஏற்றுக் கொள்வது கூடாது.

ஒரு முஃப்தி இஹ்லாஸ் எனும் அல்லாஹ்வுக்கென்ற தூய எண்ணத்தை கொண்டிருப்பது கடமையாகும். ஏற்படும் எல்லா நிகழ்வுகளுக்கும் (சட்டப் பிரச்சினைக்கும்) அவனிடமே உதவி தேட வேண்டும். மேலும் மிகச் சரியான முடிவுகளின் பால் வழிகாட்டப்படவும் உறுதியாக இருக்கவும் அவனிடமே பிரார்த்திக்க வேண்டும்.

மேலும் மார்க்கத் தீர்ப்பு வழங்கும் அறிஞர் (முப்தி) அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் வந்தவற்றையே கருத்திற் கொள்ள வேண்டும். அதில் அவதானம் செலுத்தி பிரச்சினை களுக்கான தீர்வுகளை தேட வேண்டும். அல்லது அவ்விரண் டையும் விளங்குவதில் அறிஞர்களின் கருத்துக்களை துணையாகக் கொள்வது அவசியமாகும்.

ஏதாவது சட்டப்பிரச்சினை ஒன்று தோன்றும் போது அது குறித்த தீர்வுகளை முன்வைப்பதற்காக அறிஞர்களின் கருத்துக்களைத் தேடிச் செல்வது அதிகம் நிகழும் விடய மாகும். பின்பு, அத்தீர்ப்புக்களில் திருப்திகரமான ஒன்றை பெற்றுக் கொள்ளமாட்டார். சில வேளை அது தொடர்பான விடயத்தை கண்டுகொள்ளவே முடியாது போகும். எனவே, அவர்களின் தூய எண்ணம், அறிவு, புரிதல் ஆகியவற்றினூ டாக அல்குர்ஆனையும் நபிகளாரின் ஸுன்னாவையும் அணுகினால், தெளிவானதும் மிக நெருக்கமானதுமான தீர்வுகளை பெற்றுக்கொள்வார்கள் என்பதே யதார்த்தமா கும்.

மார்க்கத்தீர்ப்பு வழங்கும் அறிஞர் (முப்தி) கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்களில், மார்க்கத் தீர்ப்பு வழங்கு வதில் அவர் அவசரப்படாமலிருப்பதாகும். ஆய்வின்றி அவ சரமாக வழங்கப்பட்ட எத்தனையோ தீர்ப்புகள் குறுகிய காலத்தில் ஆய்வுக்குப் பிறகு அத்தீர்ப்பு பிழையென முடிவு கிடைக்கும். அதனால் பிழையான தீர்ப்பினை வழங்கி, அதன் விளைவுகள் காரணமாக பின்னர் வருந்த நேரிட லாம். சில வேலை அத்தீர்ப்பை அதிகமானோர் பின்பற்றும்

நிலை தோன்றினால் அதனை மீளப்பெறவும் முடியாத துரதிஷ்ட நிலை உருவாகலாம். ஆகவே மார்கத்தீர்ப்பு வழங்குபவர் அவசரப்படக் கூடாது.

ஒரு குறிப்பிட்ட முப்தியிடம் (மார்க்கத்தீர்ப்பு வழங்கும் அறிஞர்) தீர்ப்புக் கோரி முன்வைக்கப்படும் விவகாரங்கள் தொடர்பாக மிகுந்த நிதானத்துடனும் குறித்த தகவல்களை திட்டப்படுத்திக் கொண்டும் தீர்ப்பு வழங்குவாராயின், அவரை மக்கள் நம்புவதோடு அவரது தீர்ப்புக்களை ஆர்வத்துடன் கருத்தில் கொள்வர். அவ்வாறில்லாது, தீர்ப்பு வழங்குவதில் அவர் அவசரப்பட்டால், அவர் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை இல்லாது போய்விடும். அது மாத் திரமின்றி அவரிடம் காணப்படும் அறிவு மற்றும் சரியான தீர்வுகளை மக்கள் அறிந்து பயன்பெறும் நிலையும் அற்றுப் போய்விடும்.

உயர்ந்தோனாகிய அல்லாஹ்விடம் எமக்கும் எமது முஸ் லிம் சகோதர, சகோதரிகளுக்கும் நேரான வழியை காட்டு மாறும் பிரார்த்திப்பதோடு, மேலும், அவனுடைய அருளி னால் எம்மை பொருப்பேற்க வேண்டுமெனவும்; அவனின் விசேட பாதுகாப்பின் மூலம் எம்மை தவறுகளிலிருந்து காத் தருள வேண்டுமெனவும் அவனிடம் நாம் பிரார்த்திக்கின் றோம். அவன் மிகப்பெரும் கொடையாளனும், தாராளத் தன்மையுடையனுமாவான். எமது தூதர் முஹம்மத் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும் அவரக்ளின் குடும்பத்தினர் மற்றும் அனைத்து தோழர்கள் மீதும் அல்லாஹ்வின் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக.

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன. அவன் அருள் மூலமே நற்காரியங்கள் யாவும் நிறைவுபெறுகின்றன.

***அல்லாஹ்வின் ஆசியை வேண்டி நிற்கும்***

***முஹம்மத் பின் ஸாலிஹ் அல்உஸைமீன் (ரஹ்) அவர்களால்***

***ஜும்ஆத் தின முற்பகலில்***

***ஷஃபான் மாதம் 14ம் திகதி, ஹிஜ்ரி 1392 ம் வருடம் எழுதி முடிக்கப்பட்டது.***

பெண்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு குறிப்பிட்ட நாட்கள் வெளிவரும் மாதவிடாய், இஸ்திஹாழாஹ் (தொடர் உதிரப் போக்கு) நிஃபாஸ் (பிரசவத்தின் பின் வெளிவரும் இரத்தம்) என மூன்று விதமான உதிரப் போக்குகள் இருக்கின்றன. முக்கிய விடயங்களில் ஒன்றான இவை குறித்து தெளிவைப் பெற்றுக்கொள்வதுடன் இதன் சட்டதிட்டங்களை அறிந்துகொள்வதும், இவை குறித்த அறிஞர்களின் கூற்றுக்களில் சரியானவற்றை பிழையானவற்றிலிருந்து வேறுபடுத்திக் கொள்வதும் மிக அத்தியாவசிய ஒன்றாக இருக்கிறது.